# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

மார்ச் 2011 ஜீவியம் 16 மலர் 11

இம்மாத மலரில்....

பொருளடக்கம்

பக்கம்

பகவான் மற்றும் அன்னையினுடைய வாழ்வில் உள்ள சில சுவாரசியமான அனுபவங்கள் ..... 2
இம்மாதச் செய்தி ..... 10
அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு ..... 11
அன்னையின் முத்திரை ..... 21
சாவித்ரி ..... 24
லைப் டிவைன் ..... 26
தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் ..... 36
பூரணயோகம் - முதல் வாயில்கள் ..... 37
அஜெண்டா ..... 40
அன்பர் கடிதம் ..... 43
யோக வாழ்க்கை விளக்கம் VI ..... 46
லைப் டிவைன் - கருத்து ..... 53
எதிர் வீடு ..... 56

❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

வாழ்வில் அதிர்ஷ்டம் பலிக்க மனம் வரம்பை ஏற்கக் கூடாது.

உலகை ஆட்டிப் படைக்கும் எந்த நிகழ்ச்சியும் ஒவ்வொருவர் உள்ளேயும் பிரதிபலிக்கும்.

திருவுள்ளம் பலிக்க என்றும் பலிப்பது திருவுள்ளம் என அறிய வேண்டும்.

உரிமையும், உடைமையும் போன பின்னரே திருவுள்ளம் செயல்படும்.

# பகவான் மற்றும் அன்னையினுடைய வாழ்வில் உள்ள சில சுவாரசியமான அனுபவங்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

N. அசோகன்

36. தியானின் மனைவி அல்மா தியான் தன் உடம்பை விட்டு வெளிவந்து இம்மாதிரி மேலும் 12 தடவைகள் தொடர்ந்து பல சூட்சும சரீரங்களை விட்டு வெளிவந்ததை அன்னை கவனித்தார்.

37. பின்பு இன்னொரு தடவை ஆரஞ்சுப் பழம் போன்ற ஒரு பெரிய பழத்திலிருந்து அந்தப் பழத்தை நறுக்காமலேயே அதனுடைய சாற்றினைச் சூட்சும முறையில் மேடம் தியான் அவர்கள் உறிஞ்சி எடுத்ததையும் அன்னை கவனித்தார்.

38. லெம்சன் நகருக்கு அருகில் இருந்த மலைப்பகுதியில் பைன் மரங்களுக்குப் பதிலாக குளிர் பிரதேசத்தைச் சேர்ந்த Fir மரக்கன்றுகளைத் தவறுதலாக நட்ட பொழுது பனி தேவதை அந்தப் பாலைவனப் பகுதிக்குப் பனிக்கட்டிகளைக் கொண்டு வந்ததாக (பனிப் பொழிய வைத்ததாக) அன்னை தெரிவித்தார்.

39. தியான் வீட்டு மாடியில் அவருடன் நின்று கொண்டிருந்த பொழுது ஒரு மின்னல், அன்னையை நேரடியாகத் தாக்குவதைப் போல கீழிறங்கியது. ஆனால் கடைசி நிமிடத்தில் தியான் அந்த மின்னலைத் திசை திருப்பி அன்னையின் உயிரைக் காப்பாற்றினார்.

40. அல்ஜீரியாவிலிருந்து அன்னை பிரான்சுக்குத் திரும்பிய பொழுது அவர் சென்ற கப்பலில் சைனாவிற்கு மதப் பிரச்சாரம் செய்ய போய்க் கொண்டிருந்த ஒரு பாதிரியாரைப் பார்த்தார். அவரிடம் கிருத்துவ மதம் உதயமாவதற்கு முன்னேயே சீனர்கள் இறைவனை அடைவதற்கு ஒரு வழியைக் கண்டுபிடித்து-விட்டார்கள் என்று தெரிவித்தார்.

41. பகவானைச் சந்தித்த பிறகு தன்னுடைய கவனம் மற்றும் எனர்ஜி என்று எல்லாவற்றையும் ஒருமுகப்படுத்துவதைவிட இவற்றை-யெல்லாம் பரவச் செய்வதன் மூலம்தான் தனக்கு ஆன்மீக முன்னேற்றம் கிடைக்கும் என்று அறிந்தார்.

42. அன்னைக்குக் குந்தளினி அனுபவம் கிடைத்தது. அவருடைய முதுகுத் தண்டின் கீழ்பாகத்திலிருந்து ஒளிக்கதிர்கள் தூண் போன்ற வடிவில் மேல் எழுந்து அன்னையின் தலைக்கு மேலே வட்ட நிலாப் போல விரிந்து பரவியதாம். பின்னர் அந்த ஒளி இன்னும் மேலெழுந்து சூரியன் அளவுக்குப் பெரிதாகி, அதிலிருந்து பூமியின் மேல் மழை போல் ஒளி கொட்டியதாம்.

43. ஆங்கில அரசாங்கம் புதுவையிலிருந்து பகவானை வெளி-யேற்றும்படி பிரெஞ்சு அரசாங்கத்திற்கு எழுதிய பொழுது அந்நேரம் பிரெஞ்சு அரசாங்க அதிகாரியாக செயல்பட்ட அன்னையின் சகோதரர் Matteo என்பவர் கைக்கு அக்கடிதம் சென்றதாம். அன்னை அவர் சகோதரருடன் தொடர்பு கொண்டு அந்தக் கடிதத்தைப் பரிசீலனை செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டதால் அவரும் பழைய பேப்பர்களோடு அக்கடிதத்தைச் சேர்த்துவிட்டார்.

44. பாரீஸில் இருந்த பொழுது தனக்குக் கிடைத்த அனுபவம் பற்றி பகவானுக்குக் கடிதம் எழுதினார். அதாவது முதலில் பூமியோடும், பிறகு பிரபஞ்சத்தோடும், பிறகு பரம்பொருளோடும் தனக்கு ஐக்கியம் கிடைத்ததாக எழுதினார். அதற்கு விளக்கம் அளிக்கும் வகையில் இந்த அனுபவம் அன்னையினுடைய பிஸிக்கல் ஜீவியம் இறை ஜீவியத்தோடு ஒன்றுபடுவதைக் காட்டுகிறது என்றும், இந்த அனுபவத்தில் பூமி ஒரு ஆன்மீகச் சின்னமாக வந்திருக்கிறது என்றும் பதில் எழுதினார்.

45. ஜப்பானில் அன்னை நான்கு வருடம் தங்கி டோக்கியோ மற்றும் கியோட்டோ நகரங்களைப் பார்வையிட்டார். மேலும் ஜப்பானில் மக்கள் அழகை ஒரு லட்சியமாகக் கொண்டுள்ளார்கள் என்றும் கருத்துத் தெரிவித்தார். ஜப்பானில் அமைதி மற்றும் நிம்மதியான சூழல் இருந்ததாகவும் சொல்லியிருக்கிறார். ஆனால் அதே சமயத்தில் இறை ஜீவியத்தின் சாந்நித்யத்தை உணர்வதால்

வரக்கூடிய எல்லையற்ற உணர்வு அங்கு அவருக்குத் தென்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

46. நானும் என் கொள்கைகளும் என்ற தலைப்பிட்ட ஒரு கட்டுரையில் தான் எந்தத் தேசத்திற்கும், சமூகத்திற்கும் மற்றும் இனத்திற்கும் சொந்தம் இல்லை என்றும், மாறாக இறைவனுக்கு மட்டுமே சொந்தம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

47. 1920இல் அன்னை புதுவைக்குத் திரும்பிய பொழுது பகவான், அன்னை திரும்பி வருவதற்காகவே தன்னுடைய யோக சாதனை காத்திருந்ததாகக் குறிப்பிட்டார்.

48. அன்னையின் கணவர் ரிச்சர்டு அன்னையுடன் கருத்து வேறுபாட்டை வளர்த்துக் கொண்டு, பகவானுக்குப் பதிலாக தன்னைத்தான் அன்னை அவருடைய ஆன்மீக சாதனையில் கூட்டாளியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆனால் அன்னை தன் முடிவில் உறுதியாக இருந்த பொழுது ரிச்சர்டு அன்னையை விட்டு விலகி, அவருடைய ஆன்மீக முயற்சிகளைத் தானே தனியாக தொடர்ந்து கொண்டார்.

49. 1955ஆம் ஆண்டு ஆசிரமத்திற்கு வந்த நேரு, சாஸ்திரி, இந்திரா மற்றும் காமராஜர் ஆகியவர்களை அன்னை சந்தித்துப் பேசினார். பின் நாட்களில் சாஸ்திரி, மற்றும் இந்திரா இருவருமே நாட்டின் பிரதம மந்திரிகளானார்கள். காமராஜர் அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் குழுவின் தலைவரானார்.

50. ரஷ்ய நாட்டு ஜிம்னாஸ்டிக் விளையாட்டு வீரர்கள் ஆசிரம பள்ளிக்கு வந்த பொழுது முறையான உடற்பயிற்சி மற்றும் மனவுறுதியால் மட்டுமே அவர்களுடைய விளையாட்டுகளில் இத்தகைய நேர்த்தியைக் கொண்டு வந்ததாகத் தெரிவித்தார். அவர்கள் ஆன்மீகப் பண்புகளை விளையாட்டில் கடைப்பிடித்திருந்தார்கள் என்றால், விளைவுகள் இன்னும் அற்புதமாக இருந்திருக்கும் என்றும் தெரிவித்தார்.

51. தன்னுடைய தியானமும், பிரார்த்தனையும் என்ற தலைப்பில் எழுதிய பிரார்த்தனைகளைப் பற்றி அன்னை ஆசிரம விளையாட்டு மைதானத்தில் சிறுவர், சிறுமியர்களுக்கு வகுப்பு எடுக்க ஆரம்பித்தார். ஆனால் நாளடைவில் எல்லோரும் அதில் கலந்து கொள்ள ஆரம்பித்ததால் ஒரு கட்டத்தில் அது பொதுப்படையாகிவிட்டது.



52. தன்னுடைய சீடர்களாக ஏற்றுக் கொண்ட இடத்தில் அவர்களோடு தனக்கு ஒரு ஆன்மீக பந்தம் இருப்பதோடு மட்டுமின்றி அவர்கள் இடத்தில் தன்னுடைய அம்சம் ஒன்று குடியிருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

53. அன்னை அவருடைய உடம்பில் சத்தியஜீவிய சக்தி இறங்கிய பொழுது தன்னுடைய உடம்பின் செல்களிலேயே ஒரு சுதந்தரத்தை உணர்ந்ததாகவும், சத்தியஜீவியத்தின் ஸ்பரிசத்தைச் செல்கள் உணர்ந்ததாலேயே அந்த சுதந்தர அனுபவம் கிடைத்ததாகக் குறிப்பிட்டார்.

54. அன்னை தன்னிடமிருந்த இரண்டு பூனைகளிடம் சில ஆன்மீக முயற்சிகளை மேற்கொண்டு, அதன் விளைவாக அவையிரண்டும் மானிடப் பிறவி எடுத்து ஆசிரமவாசிகளாகவே வந்தன. இவர்கள் ஆசிரம டைனிங் ஹாலில் நிறைய பாலும், வெண்ணெயும் வாங்கிச் சாப்பிட்டதை டைனிங் ரூம் நிர்வாகிகள் அன்னையின் கவனத்திற்குக் கொண்டு வந்த பொழுது, போன ஜென்மத்தில் அவர்கள் பூனைகளாக இருந்ததால் அவர்களுக்கு இப்படி ஒரு பால் மோகம் இருப்பதாகவும், அவர்கள் விஷயத்தில் தாராளமாக நடந்து கொள்ளும்படியும் அறிவுறுத்தினார்.

55. அன்னை ஒரு காய்கறித் தோட்டம் வைத்திருந்தார். அத்தோட்டத்திற்கு அவர் செல்லும்பொழுதெல்லாம் சில காய்கறிகள், ''எங்களைப் பறித்துக் கொள்ளுங்கள்'' என்று கேட்குமாம். மற்றும் சில, ''எங்களைப் பறிக்காதீர்கள், நாங்கள் இன்னமும் தயாராகவில்லை'' என்று தெரிவிக்குமாம்.

56. அன்னை அவருடைய அனுபவத்தில் ரோஜாமலர்களுக்கு ஒரு தனித்தன்மை இருக்கிறதென்றும், அவை மற்ற மலர்களோடு

சேர்ந்து இருக்க விரும்புவதில்லை என்றும் கண்டறிந்துள்ளார். ஒரு சமயம் சில ரோஜா மலர்களை மற்ற மலர்களோடு சேர்த்து வைத்த பொழுது ஒரு ரோஜா அன்னையின் விரலை முள்ளால் குத்தியதாம்.

57. அன்னை உலகத்தின் பொக்கிஷத்தைச் சூட்சும நிலையில் உள்ள ஒரு குகையில் கண்டாராம். ஆனால் அந்தக் குகையின் வாசலில் ஒரு பெரிய கருநாகம் காவல் காத்துக் கொண்டிருந்ததாம். அந்தக் கருநாகம் அன்னை உள்ளே நுழைய வேண்டும் என்றால், உலகத்து மக்களுடைய காம உணர்வுகளின் மேல் ஒரு கட்டுப்பாடு இருந்தது என்றால் நுழையலாம் என்றதாம். அத்தகைய கட்டுப்பாடு அந்த நேரம் அன்னைக்கு இல்லை என்பதால் பின்வாங்க நேரிட்டதாம்.

58. புதுவைக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்திலுள்ள கோயில்களில் குடியிருக்கும் கரிய நிறம் கொண்ட காளி தேவதை ஒன்று அன்னையோடு ஒரு ஒப்பந்தம் போட்டுக் கொள்ள விரும்பியது. அதாவது அன்னை அக்காளியினுடைய குடியிருப்பைத் தொந்தரவுபடுத்தாமல் இருந்தால் அதற்குப் பலியாக கிடைக்கும் கோழிகளில் பாதி கோழிகளை அன்னைக்குக் கொடுக்க முன்வந்ததாம். அன்னை தன்னுடைய பதிலாக, அக்காளியைத் தான் தொந்தரவு செய்யப் போவதில்லை என்றும், கோழிகளில் பங்கும் வேண்டாமென்றும் சொன்னார்.

59. அன்னையின் அறைக்கு வந்த ஒரு ஆசிரமவாசி குடிக்கத் தண்ணீர் கேட்டார். அன்னை தனக்கு வைத்திருந்த குடிநீர் டம்ளரை வழங்கிய பொழுது அந்தப் பெண் ஆசிரமவாசி, ‘‘இந்தியர்கள் அடுத்தவர்கள் குடித்த தண்ணீரைத் தாங்கள் குடிப்பதில்லை’’ என்று சொல்லி மறுத்தாராம். அதைக் கேட்ட அன்னை வியப்பில் ஆழ்ந்து போனார்.

60. ஆசிரமப் பள்ளியில் தங்கள் பிள்ளைகளைப் படிக்க விட்ட அன்னை அன்பர்கள் பல பேர் விடுமுறை நாட்களில் பிள்ளைகளைத் திரும்ப ஊருக்கு அழைத்துச் செல்ல வேண்டாம் என்று அன்னை சொல்லியும் கேட்காமல் பிள்ளைகளை



அழைத்துச் செல்வதுண்டு. இவ்விஷயத்தில் ஒரு தகப்பனார் மிகவும் பிடிவாதம் செய்த பொழுது அன்னைக்கே கோபம் வந்து, ‘‘எங்கே உங்கள் குழந்தைகள்? இனிமேல் அவர்கள் என் குழந்தைகள்’’ என்றாராம். அதன் பிறகுதான் அன்பர் அடங்கி, அன்னையை அவர் இஷ்டம்போல் குழந்தைகளை நடத்த அனுமதித்தாராம்.

61. அன்னையைக் காண வந்த அன்பர் ஒருவர் அன்னையினுடைய மகா சரஸ்வதி, மகாலட்சுமி, போன்ற நான்கு அம்சங்களையும் காண விரும்பினாராம். அவர் விருப்பத்திற்கு இணங்கி, அன்னை தனது நான்கு அம்சங்களையும் வெளிப்படுத்தி காட்சி அளித்த பொழுது அன்பர் அளவு கடந்து மகிழ்ந்து போனாராம்.

62. சத் பிரேமுடன் உரையாடிக் கொண்டிருந்த பொழுது சரஸ்வதி வீணை வாசிப்பது மற்றும் கிருஷ்ண பகவான் புல்லாங்குழல் வாசிப்பது என்று இந்துக்கள் நம்புவதைப் பற்றி நகைச்சுவையாகப் பேசினாராம். உடனே சரஸ்வதியும், கிருஷ்ண பகவானும் அன்னையிடம் நேரடியாக வந்து தாங்கள் வீணை வாசிப்பதும், புல்லாங்குழல் வாசிப்பதும் உண்மைதான் என்று சொல்லி அன்னையிடம், இது பற்றிக் கேலி செய்யக் கூடாது என்று கேட்டுக் கொண்டார்களாம்.

63. ஆரோவில் நகரத்திற்குத் திட்டம் வகுத்துக் கொடுத்த பிரெஞ்சு வரைகலை நிபுணர் Roget மாவீரன் அலெக்சாண்டருடைய மறுபிறப்பு என்று அன்னை குறிப்பிட்டுள்ளார்.

64. ஆரோவில் இருக்கும்வரை 3ஆம் உலகப் போர் நிகழ வாய்ப்பில்லை என்று அன்னை கருத்துத் தெரிவித்துள்ளார்.

65. ஆரோவில்லைத் தோற்றுவித்ததற்காக அன்னைக்கு நோபல் பரிசு வழங்க முன்வந்தார்கள் ஆனால், அவரோ, பகவானுடைய ஆன்மீகப் பணிகளைத் தொடர்வதற்காகத் தான் ஒரு கருவியாக செயல்பட்டதாகவும், அந்த அளவில் அவருடைய உடம்பிற்கு எந்த அங்கீகாரமும் தேவையில்லை என்றும் மறுத்தார்.

66. அன்னையினுடைய கருத்துப்படி பார்த்தால் தன்னிடம் இருக்-

கின்ற எல்லாவற்றையும் இறைவனுக்கு அளிப்பவர்கள்தாம் அர்த்தமுள்ளவர்கள், மற்றவர்கள் எல்லாம் அர்த்தம் இல்லாதவர்கள் என்றாகிறது.

67. அன்னை ஆசிரமத்தில் இருந்த ஒரு சீனியர் சாதகரை இரவு நேரங்களில் தன்னுடைய மெய்க்காப்பாளராக வைத்துக் கொண்டார். பயம் இல்லாத அஞ்சா நெஞ்சம் கொண்டவராக அவர் விளங்கியதால் அந்தச் சாதகரால் அத்தகைய ஒரு சேவையை அன்னைக்குச் செய்ய முடிந்தது.

68. அன்னையினுடைய அஜெண்டாவை எழுதிய சத்பிரேம் அவர்கள் தனக்கு எந்தவிதமான ஆன்மீக அனுபவமும் கிடைக்கவில்லை என்று வருத்தப்படுவார். ஆனால் அன்னையோ ஆன்மீக ஞானத்திற்கு மிகச்சிறந்த வகையில் எழுத்து வடிவம் கொடுத்த அனுபவம் அஜெண்டா எழுதியதன் மூலம் அவருக்குக் கிடைத்ததாக அவரிடம் நினைவுபடுத்துவார்.

69. திரு. கர்மயோகி அவர்கள் தம்முடைய பிறந்த நாள் அன்று ஒரு சமயம் அன்னையைத் தரிசித்த பொழுது அன்னை, பகவான் அவர்கள் எழுதிய Invitation என்ற தலைப்பு கொண்ட கவிதையின் பிரதியைக் கொடுத்தாராம். அந்தக் கவிதையில் சில வரிகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

*யார் என்னுடன் மலை ஏறுவார்கள்?*

*யார் என்னுடன் நடந்து வருவார்கள்?*

*என்னோடு இருக்க விரும்புகிறவர்கள்*

*ஆபத்தை நாடுபவராக இருக்க வேண்டும்.*

இந்தக் கவிதையை படித்த பொழுது பூரணயோகம் மிகவும் கடினமானது என்று அன்னை தமக்கு உணர்த்துவதாக கர்மயோகி அவர்கள் புரிந்து கொண்டார்.

70. பகவான் இருந்தவரையிலும் திருவுருமாற்றத்தின் பாரத்தை அவர் தாங்கிக் கொண்டார் என்றும், தாம் சிரமப்படாமல் அவர் செய்த



வேலைகளின் பலன்களைப் பெற்றுக் கொண்டதாகவும், அவர் மறைந்த பின்புதான் சத்தியஜீவியத்தை இறக்குவதற்கு உண்டான வேலையின் பாரத்தையே தாம் உணர்ந்ததாகவும் தெரிவித்தார்.

*முற்றும்.*

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பணம், பயம், பெண் மனிதனைப் பிடித்து ஆட்டுவதுண்டு. இவற்றின் அளவுகடந்த சக்தியால் மனிதன் ஆடவில்லை. மனிதனுக்கு இவற்றின் மீதுள்ள அளவு கடந்த கவர்ச்சியால் அவன் பீடிக்கப்படுகிறான்.

***ஆட்டுவது பாசம், பெண்ணல்ல.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சிருஷ்டி, ஆனந்தத்தைச் சிருஷ்டிஆனந்தமாக்கு-வதைப் போல், அன்னை ஜீவியம் சிருஷ்டி ஆனந்தத்தைப் பரிணாம வளர்ச்சியடையும் ஆன்மாவின் சிருஷ்டிஆனந்தமாக்குகிறது. பரமாத்மாவின் ஸ்பர்சத்தைப் பெற்றதால் இது முடிகிறது.

***பரமாத்மாவின் ஸ்பர்சம் வாழ்வில், சிருஷ்டி ஆனந்தத்தை உற்பத்தி செய்யும்.***

**இம்மாதச் செய்தி**

**பெரிய நேரத்தில்**

**பெரிய மனமுள்ள மனிதர்**

**உலகில் இதுவரை பிறக்கவில்லை.**



# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

✡ **பிடிக்கவில்லை, எரிச்சல் வருகிறது, பண்றது பொறுக்க முடியாது* என்பவற்றிற்கு ஒரு காரணம் "He has an ability I don't have".**

**இரு சட்டம்:**

**1) எல்லா நல்ல செயலுக்கும் நானே பொறுப்பு.**

**2) எது தவறானாலும் நானே பொறுப்பு.**

***இப்படித் தோன்றினால் நம்முள் எது அப்படிப் பேச வைக்கிறது என நினைக்க வேண்டும்.**

எவருக்கும் தங்களைப் பற்றி சில அபிப்பிராயம் உண்டு. E.g.

1) எனக்குச் சிரமம் எப்பொழுதும் இல்லை.

வேலை என்றால் பொதுவாக முடியும்.

எதிரி என எவருமில்லை.

என் ராசி, நான் போகிற வேலைக்கு மற்றவர் உதவுவார்கள்.

2) எதுவும் மல்லு போட்டுதான் முடியும்.

மற்றவர்க்கு எளிதில் நடப்பது எனக்குச் சிரமப்பட்டு நடக்கும்.

எது ஆரம்பித்தாலும் வளரும்.

3) என் உழைப்புப் பிறருக்குப் பலன் தரும்.

என் மீது தப்பில்லாமல் எல்லோரும் என்னைத் தப்பாக நினைப்பார்கள்.

எனக்கு வர வேண்டியது எப்பொழுதும் தவறும்.

எனக்குரியது உழைப்பு, கெட்ட பெயர்.

4) எனக்கு வேலையே கிடைப்பதில்லை.

தரை மட்டம் என்னுடையது.

இதுவரைக்கும் தலை தூக்கியதில்லை.

அப்படித் தூக்கினால் அடி விழுகிறது.

மனித சுபாவத்தில் இதுபோல் பல கருத்துகள் உண்டு. இவர்களைப் பற்றி உலகம் கூறுவது வேறு. தன்னையறிவது Self-awareness, திருவுருமாற்றம் transformation, அன்னை Mother வேண்டும் என்பவர் இப்படிப்பட்ட கருத்துகட்கு ஆன்மீக அர்த்தம் தெரிந்து கொள்ள வேண்டும். அவை ஏராளம். அவற்றுள் நம்மைச் சரியாக விளக்குவது, செய்வது எது எனப் புரிவது உண்மை. அப்படிப்பட்ட (statements) கருத்துகள்:

- எனக்குக் காரியத்தில் குறி, கவனம்; மற்றது பொருட்டல்ல.
- எவரும் என்னிடம் பிரியமாக, உதவியாக நடப்பார்கள்.
- வேலையை முதலில் கவனிப்பேன்; மற்றதெல்லாம் அப்புறம்.
- யாராவது வந்து என் வேலையைச் செய்து தருவார்கள்.
- எவரும் கேள்விப்படாத உதவியை எவருக்கும் செய்வேன்.
- எதுவும் வேண்டாம். சந்தோஷமாக இரு, போதும் என்பது என் சட்டம்.
- எப்படியாவது மரியாதை தேவை.
- யாரைக் குறைத்துச் சொன்னால் எனக்கு மரியாதை வரும்.
- இவருக்கு எதைச் சொன்னால் சந்தோஷப்படுவார்.
- என்ன செய்தால் இவர் முகம் கறுத்து, வாடி, சுருங்கி, வதங்கும்.
- எல்லோரும் எல்லோரிடமும் இனிமையாகப் பேசுகிறார்கள்.
- மட்டமான வார்த்தை காதில் விழவில்லையே.
- எவருக்கும் மரியாதையே தெரியவில்லை.
- உதவி கேளாமல் வருகிறது.



- இந்த மாதிரி நல்ல மனிதரைக் கண்டதில்லை.
- எவர் எப்படியிருந்தாலும், நாம் சரியாக இருப்போம்.
- பணம் ஏராளம்; பண்பு அதைவிட அதிகம்.
- சந்தேகம் என்பது எனக்கு வாராது.

## ✡ பூகம்பம்

- **எனக்கு அரைகுறையாக நம்பிக்கையுள்ளவற்றையும் நான் சொல்வதால் சிலர் நம்புவார்கள்.**

  நம்பிக்கை சாதிக்கும், பலிக்கும்.

  தனக்கே நம்பிக்கையில்லாமல் சும்மா பேசுபவருண்டு. அவர் நம்பாவிட்டாலும் அன்னைக்காக நாம் அவர் கூறுவதை அப்படியே அப்பட்டமான உண்மையென நம்பினால் நம் நம்பிக்கைக்காகப் பலிக்கும். என் குரு ஸ்தானத்திலுள்ளவர் ஒரு ஞாயிறன்று கிறுக்குக்காக என்னை போஸ்டாபீஸுக்கு அனுப்பி கார்ட் வாங்கி வரச் சொன்னார்.

  - ✧ எந்தச் சிந்தனையுமில்லாமல் ஏற்றுக் கொண்டு போனேன்.
  - ✧ போஸ்ட்டாபீஸ் ஞாயிறு திறந்திருந்தது.

    ஒரு சோதனை (experiment)க்காக திறந்தோம் எனக் கூறினர்.

  நம்மால் முடியாததும் பலிக்கும்.

  ஊரில் இல்லாததும் நம் நம்பிக்கையால் பலிக்கும்.

  நம் ஊரில் இல்லாத பொருள் கிடைக்கும் என நம்பினால் அது வெளியூரிலிருந்து எவர் மூலமாகவாவது வரும்.

  உலகில் இல்லாததும் அப்படி பெரிய நம்பிக்கைக்குப் பலிக்கும்.

  ஊரும் உலகமும் எதிர்ப்பதை நாம் நம்பினால் அவை பூகம்பமாக எழும்; புயலாக வீசும். அங்கும் நம்பிக்கை

பலிக்கும். ஆனால் அதன்முன் பெரிய எதிர்ப்பு எழும்.

அது காற்றின் எதிர்ப்பானால் புயலாகும். மண்ணின் எதிர்ப்பானால் பூகம்பமாகும். மனிதர் எதிர்ப்பானால் சண்டையாகும்.

ஒரு நாள் காலை 8.45க்கு ஒரு அன்பரை, ‘‘யோகத்தில் முடிவான நிலையை ஏற்க முடியுமா?’’ எனக் கேட்டேன். அவர் ஏற்றுக் கொண்டார். 9.00 மணிக்குப் பூகம்பம் வந்து நம் வீடு ஆடியது.

நம்பிக்கையின் நிலைகள் ஏராளம்.

- அவை முதலில் பலிக்கும்.

  அடுத்தாற்ப்போல் பெரிய அளவில் பலிக்கும்.

  பிறகு அனைவருக்கும் அது சிறிய, பெரிய அளவில் கிடைக்கும்.

- நிலைக்குத் தகுந்த பலன் உண்டு.

  நிலை மனத்தையும், சந்தர்ப்பத்தையும் பொருத்தது.

- பையனுக்குப் பெண் அமைவதும், பெண்ணுக்குப் பையன் அமைவதும் மனத்தின் நம்பிக்கையின் அளவைக் காட்டும். அதில் மற்றவர் தலையிடுவதால் - பெற்றோர் தலையிடுவதால் - குளறுபடி வருகிறது.

  பெண் நேராகப் பையனைப் பெறுவதும்

  பையன் நேராகப் பெண்ணைப் பெறுவதும் அரிது.

  அது நம்பிக்கையின் வண்ணத்தை விளக்கும்.

  சிக்கலும் விளங்கும், புரிவது சிரமம்.

- நம்பிக்கை மலையையும் நகர்த்தும்.

  அரசியல் தலைவரான நண்பருக்கு மாதம் ரூ.100/- மலை.

  குரு ஸ்தானத்திலிருந்தவருக்கு இலட்சம் இமயமலை.

  கிராமத்தில் போர் போட்டுப் பயிரிடுவது உலகில் இல்லாத மலை.



இதெல்லாம் நல்லது நடப்பது.

கெட்டது விலகுவது பெரியது.

- இருவரிடையே நம்பிக்கை மலர்ந்தால், அது அபூர்வம்.

  அதைப் பாதுகாக்கும் முயற்சி அன்னை atmosphere சூழலை நிரந்தரமாக்கும்.

  அதற்குரிய அதிகபட்சம் போனால் ஆனந்தமும், பூரிப்பும் தாங்காது (intolerable ecstasy).

## ✡ பிறர் இராசி

- 1½ மணி கரண்ட் இல்லை. இவரிடம் சொன்ன உடனே கரண்ட் வருகிறது.

  (**Instantaneous miraculousness is intensity of goodwill**).

  **நயமான நல்லெண்ணம் நெகிழும் நேரம் மனம் க்ஷணத்தில் நிறையும்.**

  கரண்ட் போகும்பொழுது இது ஒரு டிஸிப்ளின்.

  எங்கோ வேலை நடக்கிறது, ஜெனரேட்டர் ரிப்பேர் செய்கிறார்கள்.

  நேற்றே டி.வி.யில் சொன்னான் எனக் கூறக் கூடாது.

  இது ஒரு சோதனை. நமக்குப் பவர்கட்டில்லை.

  (பெரிய, நல்ல, சக்தி வாய்ந்த, அறிவுக்குப் பொருத்தமான பதில் ஒன்றுண்டு. அது நல்லதாகவோ, அல்லதாகவோ இருக்கும் - இரண்டில் ஒன்று உண்மை).

  ரூலை ஏற்றுக் கொள், எனக்குப் பவர்கட்டில்லை, இல்லவே இல்லை.

  கரண்ட் போனால் நல்லெண்ணமுள்ள ஒருவரிடம் கூறு. உடனே பவர் வரும்.

உடனே பவர் வந்தால், இதைத் தொடர்ந்து செய்.

✧ *பவர்கட் குறையும், ஒவ்வொரு முறையும் சற்று சீக்கிரம் வரும்.*

✵ தொடர்ந்து செய். அவரே மாறிவிடுவார். அவர் நல்லெண்ணம் அதிகமாகும்.

✧ *ஒரு அதிசயம் நடக்கும். மாதம் 3, 4 முறை இருந்த பவர்கட் 3, 4 மாதத்திற்கு ஒரு முறை வரும்.*

இந்தக் கட்டத்தில் நமக்குப் பவர்கட் இல்லையெனச் செய்யலாம் எனப் புரியும். நிதானமாகத் தீவிரமாக, முனைந்து, 3 அல்லது 4 மாதத்தை 1 வருஷமாகச் செய்யலாம். அதற்கு மேல் தொடரக் கூடாது.

உள்ளே பார்த்தால் உள்ளேயுள்ள சுமுகம் இதைச் சாதித்தது தெரியும். எரிச்சல்படாமல், அமைதியாக சந்தோஷமாக இருந்ததன் பயனிது எனத் தெரியும்.

✵ இது பவருக்கு மட்டுமல்ல, எல்லாச் செயலுக்கும் உண்மை.

நான் ஏமாந்துபோகிறேன்.

என்னை அவமானப்படுத்துகிறார்.

உள்ளது கிடைக்கவில்லை.

மறந்துபோகிறது.

ஒன்று போனால் ஒன்று வருகிறது.

எதுவும் கூடி வரமாட்டேன் என்கிறது.

***எந்தக் குறையும் மனக் குறையே; மற்ற குறை உலகிலில்லை.***

அது புரிவது, அன்னை புரிவதாகும்.

சோதனை புரிந்த பின்பும் மனம் பழைய பேச்சைப் பேசும். அது சரி வாராது.



✵ அர்த்தமற்ற காரணத்தை அர்த்தபுஷ்டியாகக் கருதுவது. (**Arrive at the right result by an erroneous process**).

✧ கூந்தலுள்ள சீமாட்டி.

மனம் இருந்தால் எதற்கும் அர்த்தம் தர முடியும்.

கணவன், மனைவி உறவு பெரியது, நுட்பமானது.

அந்த உறவில் அர்த்தம் ஏற்பட்டால், எதற்கும் அர்த்தம் வரும்.

அர்த்தம் என்றால் பொருள், பணம் எனப் பெயர்.

அர்த்தம் தரும் தனம் அனந்தனுக்குரியது.

அர்த்தம், காமம் என்பது வழக்கு.

அர்த்தம் பொருள், காமம் பொருளில்லாதது.

✧ இவை விளக்கப்படுவதைவிட, செய்து பார்த்தால் தெரியும்.

செய்து சோதனைப் பார்க்க நிதானம் வேண்டும்.

கடைநிலை ஊழியனுக்கு அர்த்தம் கற்பித்தால் teacher ஆசிரியருக்கு இல்லாத அர்த்தம் வரும்.

இன்று (Delhi) டெல்லியில் (Vice-President) வைஸ் பிரசிடெண்ட்ஆக இருப்பது கீழிருந்து உயர்ந்தவர்.

அர்த்தமற்றவரை அர்த்தமுள்ளவராக்குவது (democracy) மக்களாட்சி.

அர்த்தமற்ற மனிதன், விலங்கு, தாவரம், ஜடம் ஆகியவற்றிற்குப் பூரண சிறப்பான பரிணாம அர்த்தம் தருவது திருவுருமாற்றம்.

நிலக்கரியிலிருந்து கம்ப்யூட்டர் சிப் (computer chip) செய்கின்றனர்.

100 புத்தகம் (100 encyclopedia) என்ஸ்சைக்குளோபீடி-யாவை ஒரு (chip) சிப் வைத்துள்ளது.

- ✧ நமக்குக் குழந்தைகள் சிறுவர்.

  அர்த்தம் கொடுத்தால் அவர்கள் பெரியவர்கள்.

  அதிலும் (Genius) மேதை.

  மேலும் சொன்னால் குழந்தைகள் பிரம்மம்.

  அவர்களால் எதுவாகவும் ஆக முடியும்.

  நம் வீட்டில் சோதனை செய்யலாம்.

  பலன் இமயமலை போலிருக்கும்.

  கண்ணால் பார்த்தும் நம்ப முடியாது.

  எல்லா அன்பர் (devotee)களும் உலகப் பிரசித்தி (world famous) ஆகலாம்.

  10 அல்லது 100 ரூபாய் பெறலாம். (1 ரூ. என்பது 1 கோடி).

  எவரும் எதுவாகவுமாகலாம்.

- ✧ ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டு நடைமுறையில் concentrate செய்து ஒரு வருஷத்தில் பலனைக் காணலாம். கண்ட பிறகும் நம்ப முடியாத அளவு பெரியதாகச் சிறப்பாக, உயர்ந்த உன்னதம் பெற்றதாக இருக்கும்.

### ✡ நிலையாக இல்லை

❋ நடப்பது

1. பிறருக்காகக் கேட்டால்
2. மனம் நெகிழ்ந்தால்
3. உள்ளே சுமுகம் நிறைந்தால்
4. அன்னை நம்மை நினைவு கூர்ந்தால்
5. மனம் பாஸிட்டிவாக இருந்தால்



6. மனம் முழுமையாக இருந்தால் (when there is fullness)
7. மனம் லேசாக இருந்தால்
8. ஆணவமில்லாமல் unegoisticஆக இருந்தால்
9. மறந்து நெகிழ்ந்தால்
10. அகண்டம் கண்டத்திலிருந்து எழுந்தால்

***பொதுவாக நன்றாக இருந்தால் க்ஷணத்தில் நடக்கும்.***

❋ நடக்காதது

1. அல்பம்
2. சொல்பம்
3. இடுப்பொடித்துப் பேசுவது
4. அதிகாரம் செய்வது
5. குறை கூறுவது
6. தவறு பிறர் மேல் என நினைப்பது
7. அவசரப்பட்டால்
8. Tension எரிச்சலாக இருந்தால்
9. நம்மை உயர்வாக நினைத்தால்
10. பொய் சொன்னால்
11. சத்தமாகப் பேசினால்
12. பிறர் தவறு செய்யும் பொழுது, ‘அது தவறு’ என நினைத்தால் (நடக்க, பிறர் தவறு செய்வது நம்முடைய குறை காரணம் என அறிய வேண்டும்)
13. வறண்ட மனமிருந்தால்
14. தவறானவரை எதிர்த்தால்
15. தவறானவரை ஆதரித்தால்

16. மட்டமானவரை ஆதரித்தால் அல்லது எதிர்த்தால்
17. பொதுவாக மனம் மட்டமாக இருந்தால் காரியம் நடக்காது

*தொடரும்....*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

இம்முறைக்குட்பட்ட பிரார்த்தனைகள், இம்முறையால் பலிக்கின்றன. மேம்பட்டவை, தெய்வத்தால் இம்முறை மூலம் பலிக்கின்றன.

***தெய்வம் முறையைக் கடக்கும்.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

எந்தத் தெய்வத்திற்குப் பிரார்த்தனை செய்கிறோமோ அது பலன் தருகிறது. மேலும் ஓர் உண்மையுண்டு. நாம் எந்நிலையில் நம் சக்திகளைச் சேர்த்து முறைப்படுத்துகிறோமோ அந்நிலையில் அம்முறைக்குத் தெய்வீகச் சக்தியுண்டு. அதுவும் பிரார்த்தனைக்குப் பலன் தரும். யார் பிரார்த்தனைக்குப் பதில் சொன்னார்கள் என்பது வேறுபடும்.

***முறைக்கும் சக்தியுண்டு.***





# அன்னையின் முத்திரை

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

சிறிது நேரத்தில் மூன்று காபியை டிரேயில் வைத்து, ஒரு கப்பில் சர்க்கரையில் ஸ்பூன் வைத்து, எடுத்து வந்துவிட்டாள்.

எல்லோருக்கும் ஒரே மகிழ்ச்சி!

''நித்யா, நான் ஷுகர் பேஷண்ட். காபியில் சர்க்கரை போட வேண்டாம் என்று சொல்ல மறந்துவிட்டேன்'' என்றார் விஷாலின் அப்பா.

''பரவாயில்லை அங்கிள். நான் காபியில் சர்க்கரை போடாமல் தனியே கப்பில்தான் வைத்திருக்கிறேன்'' என்றாள்.

இப்போதும் விஷாலின் பெற்றோர் அர்த்தபுஷ்டியுடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

“எல்லாம் சரிதான். ஆனால், நாலு கப் காபி வேண்டும்” என்றார் விஷாலின் அப்பா.

''நீங்கள் மூவர்தாமே இருக்கிறீர்கள், நாலாவது கப் யாருக்கு?'' என்றாள் வியப்புடன்.

''இந்தக் காபியின் மணம் இங்கு யாரை அழைத்து வருமோ அவருக்கு'' என்றான் விஷால்.

ஒன்றும் புரியாமல் விழித்தாள் நித்யா.

''விகாஸ் இனியும் நீ உள்ளேயிருக்க வேண்டாம், வெளியே வா'' என்றாள் அம்மா.

விஷாலின் சாயலில், சிறிதே வயது கூடிய கம்பீரமான இளைஞன் புன்னகையுடன் வெளியே வந்தான்.

“வா, இப்படி உட்கார். இவனுக்குத்தான் நாலாவது கப்” என்றான் விஷால்.

விஷாலின் அண்ணாவாக இருக்க வேண்டும். ஆனால் இதுவரை இவனைப் பற்றி விஷால் ஒன்றும் சொல்லியதில்லை.

உள்ளே சென்று மீண்டும் ஒரு கப் காபியுடன் வந்தாள் நித்யா.

''அதை இவனுக்குக் கொடு'' என்றார் அப்பா.

விகாஸ், ''தாங்ஸ்'' என்று வாங்கிக் குடிக்க ஆரம்பித்தான்.

"காபி நன்றாயிருக்கிறதா?" என்றான் விஷால்.

'ஆம்' என்பதுபோல் தலையசைத்தான் விகாஸ்.

"சர்க்கரை போடாத காபி நித்யா கொடுத்தவுடன் இனிக்கிறதா?" என்றாள் அம்மா.

''அதில் சர்க்கரை போட்டிருக்கிறேன்'' என்றாள் நித்யா.

''அது எப்படி, அவனுக்கு மட்டும் சர்க்கரை போட்டாய்?'' என்றாள் அம்மா.

விகாஸும், நித்யாவும் புன்னகை செய்ய,

''நித்யா, இப்பொழுது நானொரு உண்மையைச் சொல்லப் போகிறேன். உனக்கு விகாஸை பிடித்திருக்கிறதா?" என்றவுடன் நித்யா மகிழ்ச்சியில் திணறிப்போனாள்.

''நான் கூறிய என் நெருங்கிய அமெரிக்க உறவினர் என் அண்ணா விகாஸ்தான்'' என்றான் விஷால்.

''விகாஸ், உனக்கு நித்யாவைப் பிடித்திருக்கிறதா?'' என்றார் அப்பா.

''என்ன கேள்வியிது? காபியை ருசித்துக் குடிக்கிறானே, தெரியவில்லையா!" என்று அம்மா கேலி செய்தாள்.

"இனி நிச்சயம் பேச வேண்டியதுதான்" என்ற அப்பா, "விஷால், நீ போய் நித்யாவின் அம்மாவையும், பாட்டியையும் அழைத்து வா. இவள் தாத்தாவை நானே அழைத்து வருகிறேன்'' என்று விஷாலின் தந்தை கூறியது நித்யாவின் காதில் தேனாய்ப் பாய்ந்தது. எங்கே இவர்களும் தன் தாத்தாவை ஒதுக்கிவிடுவார்களோ என்ற கவலை நீங்கியது.

''பெண் பார்க்க என்று வந்து உன்னை துன்புறுத்தக் கூடாது என்றுதான் இந்த ஏற்பாடு. இதில் உனக்கு வருத்தமில்லையே!" என்று விஷாலின் அம்மா கனிவாய்க் கேட்டாள்.

தன் மகிழ்ச்சியை புன்சிரிப்பால் வெளியிட்டாள் நித்யா.

மறுநாள் தியான மையம் சென்று அன்னைக்கு நன்றி கூறினாள்.



அன்னைக்காகவே வாழும் பானுவைக் கண்டு, நடந்தவற்றைக் கூறினாள்.

''பார்த்தாயா நித்யா, அன்னை நாம் கேட்பதை, கேட்கத் தெரியாததையெல்லாம் கொடுப்பார். நீ அமெரிக்கப் பயணம் கேட்டாய்; உனக்கு அமெரிக்காவில் வேலை; அங்கு உனக்குப் பொறுப்பேற்க நல்ல கணவர், அன்பான மாமன், மாமி; உன் வீட்டார் ஒதுக்கிய உன் தாத்தாவிற்கு அன்பான அழைப்பு; என்று எத்தனை பரிசுகள்! இதுதான் அன்னையின் முத்திரை'' என்று பானு உருக்கமாய்க் கூறினாள்.

இத்தனைப் பரிசுகளையும் பெற்ற நித்யா, மையத்திற்கு வந்து நன்றியைக் கண்ணீருடன் சமர்ப்பித்தாள். விஷாலும் தன் வேலை, அன்பான அண்ணி, என்ற பரிசுகளைப் பெற்று, அன்னைக்கு நன்றி கூற, அன்னை நினைவைச் சுமந்து அவர்கள் அமெரிக்கா சென்றனர்.

இத்தனை அழகாக யாவற்றையும் நடத்தித் தந்த அன்னைக்குத் தம் நன்றியைச் செலுத்த நித்யாவின் தாயும், பாட்டியும் தினமும் மையம் வந்து, தியான மையச் சேவையில் ஈடுபட்டனர்.

"நீயும், பாட்டியும் தியான மையம் வந்து இவர்கள் அருமையைப் புரிந்து கொண்டால், நம் வீடே ஆனந்தமயமாகும்" என்ற நித்யாவின் சொற்கள் எத்தனை உண்மை என்பதை அவள் அம்மாவும், பாட்டியும் நினைத்தவண்ணமிருந்தனர்.

கதை முடிந்தது. இனி நாமும் தியான மையம் செல்வோம்.

*முற்றும்.*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பலிக்காத பிரார்த்தனைகள் இம்முறையை எட்டுவதில்லை. அல்லது இம்முறையைத் தாண்டி தெய்வத்தை எட்டுவதில்லை.

***நம் பிரார்த்தனை தெய்வத்தை எட்டுவது அரிது.***

## P.123 But here were world's half-way to heaven

### மோட்சப் பாதையின் மேலான லோகங்கள்

☆ திரையிருக்கிறது ஆனால் நிழல் போன்ற சுவரில்லை;
☆ அவை மனிதனுக்குப் பிடிபடும் ரூபங்கள்
☆ கறைபடாத தூய்மையை நாடும் தீவிரம்
☆ மூலத்தின் ஆனந்தம் முகத்தைக் காட்டியது.
☆ பூமியின் தூய்மை மோட்ச உலகின் ஆனந்தம் பெற்றுத்தரும்.
☆ அது இதயம் இறைவனையறியும் உணர்வாகும்
☆ இயற்கை எழிலின் ஜோதியின் சிகரம்,
☆ இயற்கையைக் கடந்த பிரம்மத்தின் புல்லரிப்பு:
☆ புவியின் கடின பாதைகளில் வலிமை கொண்டாடும் கொக்கரிப்பு
☆ வலியின் கொடுமையை அனுபவித்தறியாத,
☆ அன்பின் லீலை அகன்று வெட்கத்தைக் கடந்த இயற்கை.
☆ ஜடத்தின் சபைகளில் கொட்டாரமடித்த கனவுகள்
☆ என்றாலும் இறைவனின் கோயில் கதவு மூடப்பட்டது.
☆ இறைவன் விடும் மூச்சு தழுவும் உலகங்கள்;
☆ பிரபஞ்சத்தைக் கடந்த பிரம்மத்தின் ஆடையின் அலங்காரம்.
☆ யுகாந்த மௌனத்தின் வெண்ணிறப் பரப்பு



☆ ஜீவன் பெற்ற ஆனந்தத்தின் அமரத்துவ ரூபங்கள்
☆ பரந்த லோகங்களைக் கடந்து வரும் பிரம்ம உறக்கம்.
☆ புதிரான குரலின் ஆனந்தமடங்கும் ஒலி
☆ புனித இனிமையின் அன்பு அழைக்கிறது,
☆ உலகத்தின் உடல் புல்லரிக்கத் தீண்டும் தேனின் சுவை,
☆ இயற்கையின் உடலைத் தழுவும் பொங்கிவரும் ஆனந்தம்,
☆ காப்பாற்றும் கரங்கள் அணைத்துப் பிடித்த லோகம்
☆ எதிர்ப்பைக் கண்டுகொள்ளாத ஏற்றமிகு தோற்றம்,
☆ மனிதன் மறுக்கும் ஆனந்தத்தை வலிய அளிக்கும்.
☆ காணாத தெய்வத்தைக் கை தட்டி அழைக்கும் குரல்,
☆ தழலாக எழும் கானம், வெண்ணிற ஆசை
☆ வையகத்தின் இசையை வைத்திருக்கும் நெஞ்சம்
☆ உறங்கும் காதில் ஒலிக்கும் பூரிப்பு.
☆ தூய்மை நெருப்பாக உணர்த்தும் உறவு நிறை வீடு,
☆ மனித உடலறியாத மகிமை நிறைந்த வேகம்;
☆ பரந்து விரிந்த சக்தி பாரமற்று செயல்படும்
☆ தாளம் பூரித்துத் தழைக்கும் இன்பம்.
☆ காலம் கனிந்து பாடும் கானம் இறைவனின் மகிழ்ச்சி;

❋❋❋

### ஸ்ரீ அரவிந்த சுடர்

மேல்மனத்தின் எந்நிலையிலிருந்தும் அழைப்பது நம் முயற்சி. அதைத் தாண்டினால் அழைப்பு நிற்காது. தானே எழும்.

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XXI. The Ascent of Life

Page No.199
Para No.2

This is a mechanical principle.
The scientific Mind sought
to extend it to Life.
It is proper to Matter.
Consciousness is concealed in Matter.
This is proper to the existence of Matter.
A new principle has entered life.
They don't see it.
It has a reason of being.
It is the very reason.
It is to subject to itself the mechanical.
The principle of Life is aggressive.
Its individual is of vital selfishness.
He has the instinct of self-preservation.
It is a process.
Self assertion is its spirit.
Aggressive lie is part of it.



## 21. உயரும் வாழ்க்கை

இது ஜீவனற்ற சட்டம்.

விஞ்ஞானி இந்தச் சட்டத்தை வாழ்வுக்குப் பயன்படுத்தினான்.
இது ஜடத்திற்குப் பொருந்தும்.
ஜீவியம் ஜடத்தில் ஒளிந்துள்ளது.
இது ஜட வாழ்வுக்குப் பொருத்தமானது.
வாழ்வில் ஒரு புது சட்டம் செயல்படுகிறது.
விஞ்ஞானம் அதைக் காணவில்லை.
அது வந்ததற்கே ஒரு காரணம் உண்டு.
அக்காரணத்திற்காகவே அது வந்துள்ளது.
ஜடத்தை ஆள வந்தது வாழ்வு.
வாழ்வு போராடுவது.
மனிதனுக்குச் சுயநலம் உயிர்.
தன்னைக் காப்பாற்றும் உணர்வுடையவன் மனிதன்.
அது வாழ்வின் முறை.
தன்னை வலியுறுத்துவது முக்கியம்.
வாழ வலியுறுத்துவது அதன் வழி.

The Darwinian formula was used to extend life.
It was done too largely.
There are two states of Life.
There is a new principle.
They contain the seeds of that.
There is another state.
It will increase in proportion as Mind evolves.
It evolves out of matter.
It comes out through the vital formula.
It comes into its own Law.
Life evolves upwards towards Mind.
Mind evolves towards Supermind and Spirit.
All things must change accordingly.
The struggle for survival is contradicted by the law of death.
The impulse towards permanence is also contradicted.
The individual life is compelled to work for the species.

It is so used.
It needs the cooperation of others.
It cannot do without it.
There is the principle of cooperation.
Mutual help is a law.
The desire for others is there.
There is the desire for the wife.
The child, the friend, the helper are needed.
The associated group is needed.
The practice of association is needed.
Conscious joining and interchange are the seeds.
The principle of love flowers out of them.



டார்வின் சட்டத்தை வாழ்வுக்கும் நீட்டித்தனர்.
ஏற்க முடியாத அளவுக்கு அதைச் செய்தனர்.
இவை வாழ்வின் இரு நிலைகள்.
ஒரு புதுச் சட்டமுண்டு.
அதன் வித்து இதனுள் உள்ளது.
வேறொரு நிலையுண்டு.
மனம் பரிணாமத்தால் வளரும் அளவுக்கு இச்சட்டமும் வளரும்.
அது ஜடத்தினின்று வெளி வருகிறது.
அது உயிரின் சட்டமூலம் வெளி வருகிறது.
அப்படி அதுவே சட்டமாக மாறுகிறது.
வாழ்வு மனத்தை நோக்கி பரிணாம வளர்ச்சி பெறுகிறது.
ஆன்மாவையும், சத்தியஜீவியத்தையும் நோக்கி மனம் வளர்கிறது.
இதற்கேற்ப அனைத்தும் மாற வேண்டும்.
மரணம் வாழ்க்கைப் போராட்டத்தை மறுக்கிறது.
நிரந்தரமான நிலையையும் மரணம் மறுக்கிறது.
தனி மனிதனைத் தன் இனத்திற்காகச் சேவை செய்யக் கட்டாயப்படுத்துகிறது.
வாழ்வு அதை அப்படிப் பயன்படுத்துகிறது.
அதற்கு மற்ற அனைத்தும் ஒத்துழைக்க வேண்டும்.
அது இன்றி முடியாது.
ஒத்துழைப்பு ஒரு சட்டம்.
பரஸ்பரம் உதவுவது ஒரு சட்டம்.
மற்ற மனிதர் தேவைப்படுகிறது.
மனைவி தேவை.
மக்கள், நட்பு, உதவி தேவை.
மக்கள் சேர்ந்து வாழும் கூட்டம் தேவை.
சேர்ந்து வாழும் மனப்பான்மை அவசியம்.
சேர்ந்து வாழ்ந்து பரஸ்பரம் உதவுவது அன்பிற்கு வித்து.
இவற்றிலிருந்து அன்பு மலர்கிறது.

Love is a pure vibration.
At first love may not be pure.
It may only be extended selfishness.
Let us grant it.
This aspect may persist.
It may even dominate.
It is true in higher stages of evolution.
Still Mind evolves.
More and more Mind finds itself.
It gets the experience of life and love.

Mutual help too helps perceive.
It sees the natural individual is a minor term of being.

He exists by the universal.
Man is a mental being.
He inevitably discovers this truth.
His destiny is determined by this discovery.
There is something beyond itself.
Man can open to this truth.
He has reached that point.
His evolution is predetermined.
He must attain supermanhood.
It is towards supermanhood.
It is towards Spirit.
It is towards something superior.
However obscure and slow it is.
From that moment, it is predetermined.



அன்பு தூய்மையானது.
ஆரம்பத்தில் அன்பு தூய்மையானதாக இல்லாமலிருக்கலாம்.
அன்பு சுயநலத்தின் மாறிய உருவமாக இருக்கலாம்.
நாம் அதை ஏற்க முடியும்.
இந்த அம்சம் தொடரலாம்.
இந்த அம்சம் அனைத்தையும் ஆட்கொள்ளலாம்.
பரிணாமத்தின் உயர் கட்டங்களில் இது உண்மை.
மனம் பரிணாம வளர்ச்சி பெறுகிறது.
மனம் தன்னை அதிகமாய் அறிகிறது.
வாழ்வின் அனுபவத்தாலும் அன்பின் அனுபவத்தாலும் மனம் அதிகமாக அறிகிறது.
பரஸ்பர உதவியும் அதை அறிய உதவுகிறது.
இயற்கையில் மனிதன் சிறு முக்கியத்துவம் உள்ளவனென அறிகிறது.
மனிதன் பிரபஞ்சத்தால் வாழ்கிறான் என அறிகிறது.
மனிதன் மனம் உடையவன்.
இந்த உண்மையை மனிதன் அறிவதைத் தடுக்க முடியாது.
இதைக் கண்டுகொண்டால், மனிதன் தன்னை அறிவான்.
தன்னைக் கடந்த உண்மையுண்டு.
இந்த உண்மையை மனிதன் அறிய முடியும்.
அக்கட்டத்தை மனிதன் அடைந்துவிட்டான்.
மனிதப் பரிணாமம் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டது.
அவன் சத்தியஜீவிய நிலையை அடைய வேண்டும்.
அவன் பரிணாமம் அவனை சத்தியஜீவனாக்கும்.
அது ஆன்மாவை நோக்கிய பயணம்.
பரிணாமம் உயர்ந்த கட்டத்தை நோக்கிச் செல்வது.
எவ்வளவு இருண்டு மெதுவாக நகர்ந்தாலும்,
அந்தக் கட்டத்திலிருந்து அது தவிர்க்க முடியாதது.

Life has a nature. Page No.200
Its nature compels life to a third status. Para No.3

It is predestined.
It is life's self-expression.
It is a set of terms.
We can examine this ascent of Life.
This is the last terms of its evolution.
We have called this the third status.
It has an appearance.
It is its contradiction.
It is its opposition.
Really it is its fulfillment.
It is its transfiguration.
There are extreme divisions.
Life starts with them.
There are rigid forms of Matter.
Atom is of this rigid division.
Atom is the very type.
Atom is the basis of all material form.
The atom stands apart from all others.
It is so even in its union with them.
The atom rejects death and dissolution.
Under any ordinary form it refuses to dissolve.
It is the physical type of separate ego.
There is a principle of fusion in Nature.
The Atom defines its existence against this principle.
Unity is a strong principle in Nature.
Division is equally important for Nature.



வாழ்வுக்குச் சுபாவமுண்டு.
அதன் சுபாவம் வாழ்வை மூன்றாம் நிலைக்குப் போகக் கட்டாயப்படுத்துகிறது.
இது விதிக்கப்பட்ட போக்கு.
வாழ்வு தன்னை வெளிப்படுத்துவதாகும் அது.
அது நிபந்தனைகள் நிறைந்த நிலை.
வாழ்வு இப்படி உயர்வதை நாம் ஆராயலாம்.
வாழ்வின் பரிணாமத்திற்கு இதுவே கடைசி கட்டம்.
இதை மூன்றாம் கட்டம் எனக் கூறினோம்.
இதற்கொரு தோற்றமுண்டு.
இந்நிலை வாழ்வுக்கு முரண்பாடானது.
இது அதற்கு எதிரானது.
உண்மையில் இது அதன் முதல் நிலையைப் பூர்த்தி செய்வது.
முதல் நிலையின் திருவுருமாற்றம் இந்நிலை.
அளவு கடந்து துண்டாடப்படுவதுண்டு.
வாழ்வு இங்கு ஆரம்பிக்கிறது.
ஜடத்தின் கடுமையான உருவங்களுண்டு.
அணு இந்தக் கடுமையான உருவமுடையது.
அணுவே இந்த ரகத்தின் அற்புதப் பிரதிநிதி.
அணு ஜட உருவத்தின் அஸ்திவாரம்.
மற்றவற்றதினின்று அணு முற்றிலும் வேறுபட்டது.
மற்றவற்றுடன் இணைந்தபோதிலும் அணு பிரிந்து காணப்படுகிறது.
அணுவுக்கு மரணமில்லை, கரைய மறுக்கும்.
சாதாரண சக்திகளால் அணுவைக் கரைக்க முடியாது.
தனித்த அகந்தையின் ஜட உருவம் அணு.
இணைந்து கரைவது இயற்கையின் ஒரு சட்டம்.
இச்சட்டத்தை மறுத்து விளக்குவதாக அணு உள்ளது.
ஐக்கியம் இயற்கைக்கே உரிய சட்டம்.
பிரிவினையும் முக்கிய சட்டம்.

Unity is a master principle.
Division is a subordinate principle of it.
Every divided form must subordinate itself to the principle of unity.
Mechanical necessity is one form.
Compulsion is another.
Ascent or inducements are others.
Nature allows the atom to resist fusion.
Nature has her own ends.
Nature must have a firm basis of her combination.

She must have a fixed seed of forms.
Nature compels the atom to subserve the process of fusion.

Atom is the first aggregate.

*Contd....*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

நல்லெண்ணத்தின் நிறைவு மனத்தைக் கடந்து வழிந்த சமயம் வருமானம் 10 மடங்காக அவருக்குப் புரியுமுன் மேலும் மூன்று மடங்காகியது. இடையறாத நல்லெண்ணத்தைவிட உயர்ந்தது எதுவுமில்லை எனச் சொல்லத் தோன்றுகிறது.

***பத்தானது மேலும் மும்மடங்காகும் நல்லெண்ணம்.***



ஐக்கியம் மூலமான சட்டம்.
பிரிவினை அதற்குட்பட்ட உபசட்டம்.
பிரிந்தவை அனைத்தும் ஐக்கியத்திற்கு உட்பட வேண்டும்.

செயலின் அவசியம் ஒரு வகை.
கட்டாயம் அடுத்த முறை.
ஏற்பதும், ஆசைக்குட்படுவதும் இதர முறைகள்.
ஐக்கியத்தை மறுக்க இயற்கை அணுவை அனுமதிக்கிறது.
இயற்கையின் போக்கு அதற்கேயுரியது.
தான் இணைப்பவற்றிற்கு வலுவான அடிப்படையை இயற்கை தேடுகிறது.
ரூபங்கள் ஜனிக்க நிலையான வித்துகள் தேவை.
ஐக்கியத்திற்குப் பகுதியாக இருக்க இயற்கை அணுவைக் கட்டாயப்படுத்துகிறது.
அணுவே முதலில் எழுந்த தொகுப்பு.

*தொடரும்......*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

ஒவ்வொரு காலத்தையும் (era) குறிப்பிடும் கருத்து, பண்பு, நோக்கம், பரவலான பழக்கம், கொள்கை, ஒரு பொழுதுபோக்கு, ஒரு கேலி அல்லது ஒரு சரக்கு ஏற்படுகிறது. எல்லா அம்சங்களிலும் ஒரு காலம் தெளிவாகவும், குறிப்பாகவும் வெளிப்படும்.

***காலம் வெளிப்படாத கருத்தில்லை.***

# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

196. *நாய் நன்றிக்குப் பேர் போனது.*

**நன்றி மட்டுமே மனிதனுக்குரிய நல்லது.**

197. *வெளியூர் 10 காணியை விற்று உள்ளூரில் ஒரு காணி வாங்க வேண்டும்.*

**நிர்வாகம் நிதர்சனமான நிர்ணயம்.**

198. *ஆபத்திற்குத் தோஷமில்லை.*

**ஆபத்தில்லை.**

199. *குடும்பம் ஒரு கோயில்.*

**குடும்பம் தெய்வத்திற்குரியது.**

200. *கிணற்றுத் தவளை.*

**புறத்தை உட்கொண்ட அகம்.**

*தொடரும்....*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

எவ்வளவு உயரமும் எட்டும் தீவிர பிரார்த்தனைகள் பலிக்காமலிருப்பதுண்டு. ஏனெனில் இம்முறையுள் இப்பிரார்த்தனைக்கு எதிரானது இருக்கும்.

***தீவிரமிருந்தாலும் எதிரானது பலிக்கும்.***



# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## 45. தானே எழும் ஜீவிய ஸ்தாபனம் காலத்தைச் சுருக்கும்

- வேலைக்குரிய அமைப்பை ஸ்தாபனம் என்கிறோம்.
- இந்த ஸ்தாபனம் வேலையால் அமைக்கப்படலாம்.
- நம்மால் அமைக்கப்படலாம்.
- நம் ஜீவியத்தால் ஏற்படலாம்.
- பொதுவாக நாம் முயன்று ஏற்படுத்துவது இது.
- **இந்த ஸ்தாபனம் தானே ஏற்படுவது வழக்கமில்லை.**
- பாங்க் 120 பேருக்குக் கடன் கொடுத்தது. தவணை முடிந்தால் கடன் பெற்றவரை பணம் கட்டும்படி தபால் வரும். நேரில் வந்து கேட்பார்கள். பல முறை கேட்டால், சிலர் பணம் தருவார்கள். **இம்முறை வழக்கத்திற்கு மாறாக கடன் பெற்றவர் கூடி கடனை கேட்குமுன் தர முடிவு செய்தனர்.** இது தானே ஏற்பட்ட ஸ்தாபனம். மக்கள் ஜீவியம் ஏற்படுத்தியது. வேலை காலம் தேவைப்படாமல் முடிந்தது.
- ஒருவருடைய இரு பெண்களுக்கு நெடுநாள் திருமணமாக-வில்லை. உறவினர் கூடும் சந்தர்ப்பத்தில் இது விவாதிக்கப்பட்டு, 50,000 ரூபாய் வசூல் செய்து திருமணங்களை முடிக்க முடிவு செய்தனர். பெண்ணின் பெற்றோர் மறுத்துவிட்டனர். இது உலக வழக்கிற்குப் புறம்பானது.
- உறவினர் உணர்வது ஜீவியம், கூடி முடிவு செய்வது ஸ்தாபனம். இது தானே அமைவது அருள்.

  இப்படி ஒருவர் வாழ்வில் ஏற்படுவது அருளைக் கடந்த பேரருள். அவர்களுக்கு யோகம் பலிக்கும்.
- ஒரு அன்பர் திருமணங்கட்குப் போவதில்லை என்ற முடிவு

எடுத்தார். அவர் மனைவி அதை ஏற்கவில்லை. ''நாம் போகாவிட்டால் நம் வீட்டு விசேஷத்திற்கு யார் வருவார். நான் போகிறேன்'' என்று அவர் மட்டும் போனார். பல வருஷங்-களாயின. அன்பர் மகளுக்குத் திருமணம் வந்தது.

உறவினர் கூடிப் பேசினர். கேலியாக ஒருவர் கூறினார், "இந்தக் கல்யாணத்திற்குப் பெண்கள் மட்டும் வருவார்களா?". திருமண நாள் நெருங்கும்பொழுது வேறொரு திருமணத்தில் கூடிய உறவினர்கள், ''அன்பர் திருமணத்திற்கு நாம் அனைவரும் போகாவிட்டால், அது நம் அந்தஸ்திற்குச் சரியில்லை" என்றனர். ஆண்களும், பெண்களும் தவறாது வந்தனர்.

- நாம் செய்ய வேண்டிய வேலையைப் பிறர் செய்வது பண்புள்ள ஊர்களில் நடக்கும்.

- எலக்ஷனில் வேட்பாளர் வாக்காளர்களை அணுகி ஓட்டு கேட்பார்கள்.

அப்படி அவர் சார்பில் கேட்கத் தொண்டர் குழுக்களை ஏற்படுத்துவர்.

தொண்டர்கட்குச் செலவாகும்.

சில வேட்பாளருக்குத் தொண்டர்களே சேர்ந்து குழு அமைத்து ஓட்டு கேட்கப் போவார்கள்.

தொண்டர்களும் முன்வராமல் தானே ஓட்டு கேட்கும் இயக்கம் அரிது.

**இயக்கமோ, குழுவோ, தொண்டரோயின்றி வாக்காளர் தாமே விரும்பி வந்து ஓட்டுப் போடும் அற்புதமும் உண்டு.**

- குருக்கள் வீட்டில் பெண் பார்க்க வந்த வரன் பெரிய பெண்ணைத் தவிர்த்துச் சிறிய பெண்ணை முன் வைத்தபோது, வீட்டு நிலைமையறிந்து இரு பெண்களையும் தானும் தம்பியும் மணப்பதாகவும், பெண்ணின் தம்பிக்கு உபநயனம் செய்வதாகவும் கூறியது அரிபொருளான நிகழ்ச்சி.

முயன்று செய்ய ஒருவரில்லை.

இக்கருத்தை நினைக்கப் பெண் வீட்டார் முன்வரவில்லை.



எண்ணம் தானே எழுகிறது.

அதற்குரிய வழி முறைகளை அதுவே ஏற்படுத்தியது.

அதைச் செய்தது ஜீவியம்.

ஜீவியம் முன்வந்து ஸ்தாபனம் ஏற்படுத்துவது அரிது.

அரிதான அந்தச் செயல் காரியத்தைச் க்ஷணத்தில் முடிக்கும்.

அன்றே அனைத்தும் முடிவு செய்யப்பட்டது.

இது பேரருள், யோக அம்சமுள்ளவர் வாழ்வில் நடக்கும்.

*தொடரும்.....*


**MALARNDHA JIVIYAM**
Form IV (See Rule 8)

Statement about ownership and other particulars about **Malarndha Jiviyam** (according to Form No.IV, Rule 8 circulated by the Registrar of Newspaper for India).

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Pondicherry |
| 2. | Period of its Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | **Mrs. Anuradha Sriram,** |
| | Nationality | : | Indian |
| | Address | : | Integra, 51, II cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry 605 005. |
| 4. | Publisher's Name | : | **Mr. P.V. Balakrishnan,** |
| | Nationality | : | Indian |
| | Address | : | 12, I Cross, Venkata Nagar, Pondicherry 605 011. |
| 5. | Editor's Name | : | **N. Asokan** |
| | Nationality | : | Indian |
| | Address | : | 5, Puduvai Sivam St., Venkata Nagar Extn., Pondicherry 605 011. |
| 6. | Name and address of the individual who owns the newspaper and partners or shareholders holding more than 1% of the capital. | : | **The Mother's Service Society,** 5, Puduvai Sivam St., Venkata Nagar Extn., Pondicherry 605 011. |

I, (**P.V.Balakrishnan**) hereby declare the particulars given are true to the best of my knowledge and belief.

**sd...................................**
**(P.V. BALAKRISHNAN)**
Date : 01-03-2011 Signature of the Publisher.

**Auroville is the best chance to avoid conflict.**

**Art of creating unity in complexity is the spirit.**

**Organise, you will fossilize.**

**முரண்பாடு, பிணக்கை விலக்க ஆரோவில் அற்புதமான சந்தர்ப்பம்.**

**சிறப்பான சிக்கல் போன்ற பின்னலில் ஒற்றுமை ஏற்படுத்துவதே இலட்சியம்.**

**சட்டம் போட்டு நிர்வாகம் செய்தால் ஜீவன் செத்துவிடும்.**

21ஆம் நூற்றாண்டில் மனிதன் உலகெங்கும் செம்மறி ஆடாகச் செயல்படுகிறான். கூட்டமாகச் செல்லும் ஆடுகளில் ஒன்று பள்ளத்தில் விழுந்து இறந்தால், அடுத்த ஆடு விழும். அதைப் பின்பற்றி முழு மந்தையும் விழுந்து சாகும். இது செம்மறி ஆட்டின் அறிவு. பெரிய விஷயம், சின்ன விஷயம், முன்னேறிய மேலை நாடுகள், பின்தங்கிய கீழ்நாடுகள் அனைத்தும் இன்று இது போலவே நடக்கின்றன. 1943இல் உணவு உற்பத்தி வங்காளத்தில் 5% குறைந்தது. இது ஒரு பெரிய விஷயமில்லை. ஜப்பானில் 80% குறைகிறது. இங்கிலாந்தில் 35% குறைகிறது. போர்க்காலமென்றாலும் அதைச் சமாளிப்பது பெரிய காரியமில்லை. அந்த வைஸ்ராய் போய் அடுத்த வைஸ்ராய் வந்த பொழுது உடனே எடுத்த நடவடிக்கையால் பஞ்சம் தீர்ந்தது.



500 ஆண்டுகட்கு முன் பிளேக் வந்து ஐரோப்பாவில் ஜனத் தொகையில் மூன்றிலொரு பங்கு இறந்தது. அதைத் தடுக்க வழியில்லை. உலகம் அனுபவித்தது. 1900இல் இந்தியாவில் பிளேக் வந்தது. இலட்சம் ஆங்கிலேயரும், 30 கோடி இந்தியரும் பாதிக்கப்பட்டனர். ஆங்கிலேயர் அனைவரும் தடுப்பு ஊசி போட்டுக் கொண்டார்கள். அவர்கட்கு ஏற்பட்டது மிகச்சிறிய சேதம். இந்தியர் தடுப்பு ஊசியை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர்; பெருநஷ்டமடைந்தனர்.

புயல், வெள்ளம் வந்தால் 1947க்கு முன் இது நம் தலைவிதியென மக்கள் ஏற்பார்கள். இலட்சக்கணக்காக மக்கள் அழிவார்கள். இன்று முன்கூட்டி எச்சரிக்கிறார்கள். மக்களைத் தாழ்ந்த பகுதியிலிருந்து பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு போகின்றனர். நிவாரணமாக சாப்பாடு போடுகிறார்கள். ஆபத்து விலகுகிறது; குறைகிறது. சுனாமி வந்தபொழுது கவனக்குறைவாக இருந்ததால், பெருநஷ்டம் ஏற்பட்டது.

பகவானும், அன்னையும் அவதரித்ததிலிருந்து அருள் அதிகமாகச் செயல்படுகிறது. 1956க்குப் பிறகு அருள் ஏராளமாகச் செயல்படுகிறது. மனிதன் குதர்க்கமானவன்; தனக்கே நல்லது செய்யும் அறிவு இல்லாதவன். இரண்டாம் உலகப் போரைத் தடுத்திருக்கலாம்.

இப்பொழுது ஆராய்ச்சியாளர் ஏராளமாக அக்கருத்தைத் தெரிவிக்கின்றனர். தடுக்கவில்லை; 6 கோடி மக்கள் உயிரிழந்தனர்; பெருநஷ்டம் ஏற்பட்டது. போர் முடிந்தவுடன் உலக சமாதானம் நிறுவ எல்லா சந்தர்ப்பங்களுமிருந்தன. போருக்கு முன், “இனி வரும் போர்களைத் தடுக்கும் போராக இரண்டாம் உலகப் போர் அமையும்” என்றனர். அதே போல் எழுந்த சந்தர்ப்பத்தில் ஐக்கிய நாடுகள் சபை ஏற்பட்டது. ஆனால் அணுகுண்டு போட்டி எழுந்து உலகை பேயாகக் கவ்வியது. இது மனிதன் செய்தது. வல்லரசு போராட்டம் எழுந்து (cold war) போட்டியால் உலகம் திணறியது.

***அந்த நாட்களில் போட்டி போராவதைத் தடுக்க அன்னை ஆரோவில்லை நிறுவினார். அப்பொழுது பேசியதே மேற்கூறியவை.***

* செம்மறியாட்டின் சுபாவமே மனித சுபாவம்.
* மனிதனுக்குத் தனக்கே நல்லது செய்து கொள்ளத் தோன்றாது.
* பிறருக்குக் கெடுதல் செய்ய மனிதன் முனைந்து நிற்பான்.
* பல வழிகளிலும் உதவி வந்தாலும் கண்ணுக்குத் தெரியாது.
* வற்புறுத்திக் கொடுத்தால், வலிய மறுப்பது மனித சுபாவம்.
* 1962இல் சீனாக்காரரை கல்கத்தா வீதிகளில் அன்னை 'கண்டார்'. இந்தியருக்கு ஆதரவு கொடுத்து, அவர்களைத் திருப்பி அனுப்பச் சொன்னால், இந்தியர் காது கொடுத்துக் கேட்கவில்லை. சைனாக்காரரை திரும்ப அன்னை போகச் சொன்னபொழுது அவர்கள் ஏற்றுப் போனார்கள்.

ஆரோவில்லில் பல நாட்டு மக்கள் கூடியிருப்பதால் அவர்கள் சுமுகம் உலகில் சுமுகத்தை ஏற்படுத்தும் என்பது ஆன்மீக உண்மை. அவர்கள் சண்டையிட்டால் பிரபஞ்சம் அதை ஏற்று உலகப் போரைத் தடுக்கும் என்பது ஆன்மீகம். சிறு விஷயங்களில் மனிதன் வெளிப்படுத்தும் பெருந்தன்மை பெருவிஷயங்களில் அவனுக்கு அபரிமிதமான பலன் தரும். அந்த இடத்தில் - ஆரோவில்லில் - உலகத்துச் சட்ட திட்டங்களைப் புகுத்தினால் (organise) அது ஜீவனை அழிக்கும். சுமுகம் பிறக்கச் சுதந்தரம் வேண்டும். அதிகாரம், கட்டுப்பாடு, சட்டம் அங்கு இலட்சியத்தையே அழிக்கும் என்று அன்னை மேற்கூறியவாறு அஜெண்டாவில் எழுதியுள்ளார்.

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அகந்தை அழிந்தால் நாம் சிருஷ்டியின் ஆன்மாவை அடைகிறோம். அறியாமை தெய்வ மனத்தில் எழுகிறது. அகந்தை இயற்கையின் சக்தி. அறியாமை, அறிவு தன்னுள் தானே மறைவதால் எழுவது.



# அன்பர் கடிதம்

*ஓம் நமோ பகவதே !*
*ஸ்ரீ அரவிந்தாய நமஹ !*

எங்கள் அன்பு தெய்வம் ஸ்ரீ அன்னை அவர்களுக்கும், ஸ்ரீ பகவான் அவர்களுக்கும் எனது கோடி நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுக்கெல்லாம் ஸ்ரீ அன்னை அவர்களையும், ஸ்ரீ பகவான் அவர்களையும் அறிமுகப்படுத்திய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தர் அவர்களின் ஆசீர்வாதத்தால் இக்கடிதத்தைச் சமர்ப்பிக்கின்றேன்.

எங்களுக்கு ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தர் அவர்களினால் கிடைத்த அருள், பலன் ஏராளம். எங்களுக்கு ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் அருளால் பெண் குழந்தை பிறந்தது. அவள் பெயர் மிர்ரா (எ) யோகதர்ஷினி. இப்போது வயது 4 ஆகிறது. LKG படித்துக் கொண்டிருக்கிறாள். தினமும் பள்ளிக்குச் செல்லும்போதும், வெளியே எங்கு சென்றாலும், "மதர் போய்ட்டு வரேன்" என்று சொல்லிவிட்டுத் தான் கிளம்புவாள். புதிய பொருள் எது வாங்கினாலும், புது ஆடை உடுத்தினாலும் மதர் கிட்ட காட்டி, ''நல்லா இருக்கா மதர்?'' என்று கேட்பாள். அவளாக மதருக்கு அழகாக பூ அடுக்குவாள். இன்னும் ஏராளம். எல்லாம் ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரின் அருள்தான். கடந்த மாதம் 20-10-10 அன்று யோகதர்ஷினிக்கு காய்ச்சலாக இருந்தது. மதரிடம் சமர்ப்பணம் செய்துவிட்டு டாக்டரிடம் சென்றோம். இரண்டு நாளில் காய்ச்சல் சரியானது. மீண்டும் மறுவாரம் 27-10-10 அன்று காய்ச்சல் நெருப்பாக இருந்தது. எங்கள் குழந்தை காய்ச்சல், உடம்புவலி, வயிற்றுவலியால் மிகுந்த வேதனை அடைந்தாள். இரண்டு நாட்கள் கழித்து காய்ச்சல் குறைந்தது. வயிற்றுவலி விடவில்லை. மதரிடம் பிரார்த்தனை செய்தோம். வயிற்றுவலிக்கு scan செய்து பார்த்ததில், ''கல்லீரல் வீக்கமாக உள்ளது. அதனை சுற்றி நீர் கோர்த்து உள்ளது.

டெங்கு காய்ச்சல் போல் உள்ளது'' எனவும், ''இரத்தத்தில் உள்ள அணுக்கள் மிகக்குறைவாக உள்ளது'' என்றும் மருத்துவர் கூறினார். "நீங்கள் தாமதிக்காமல் உடனே வேறு மருத்துவமனைக்குச் சென்று குழந்தைக்கு treatment எடுக்கவும்" என்று சொன்னார். நாங்கள் scan ரிப்போர்ட்டை எடுத்துக் கொண்டு எங்கள் தியான மையத்திற்குச் சென்று ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தர் அவர்களிடம் நானும், என் கணவரும் அழுது, "மதர், நீங்கள்தான் நம் குழந்தையைக் காப்பாற்ற வேண்டும்'' என்று பிரார்த்தனை செய்தோம். தியான மைய பொறுப்பாளர் அவர்கள், "கவலைப்பட வேண்டாம். ஒன்றும் செய்யாது. மதர்ஐ கூப்பிட்டுக் கொண்டே இருங்கள்'' என்று கூறி, Blessing Packet கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டு, யோகதர்ஷினியை மதுரையிலுள்ள மீனாட்சி மிசின் மருத்துவமனைக்குச் சென்றோம். அங்கு சென்றவுடன் (ICU) அவசர சிகிச்சை பிரிவில் வைத்து முதல் treatment செய்தனர். அங்கிருந்த மருத்துவர், ''உங்கள் குழந்தை மிகவும் கிரிட்டிக்கல்ஆக இருக்கிறாள். இது டெங்கு காய்ச்சல், இரத்தத்தில் அணுக்கள் மிக மிகக்குறைவாக உள்ளது. 1,00,000 முதல் 3,00,000 வரை இருக்க வேண்டும். 31,000தான் உள்ளது" என்று கூறினார். ''இரத்தம் ஏற்ற வேண்டும்'' என்றும், ''அது ஏற்றினாலும் உடம்பில் இரத்த கசிவு ஏற்படக்கூடாது'' எனவும் கூறினார். மிகவும் கஷ்டமாக இருந்தது. நாங்கள், டாக்டர் எங்களிடம் கூறியதை மதர்கிட்ட சமர்ப்பணம் செய்து கொண்டே இருந்தோம். பின்னர் யோகதர்ஷினியை General Wardக்கு மாற்றினார்கள். அங்கு சென்ற உடன் யோகதர்ஷினியை அட்மிட் செய்த bedக்கு அருகில் அதே டெங்கு காய்ச்சல் உள்ள ஒரு பையனை அட்மிட் செய்திருந்தனர். அவனுடைய பெற்றோர் எங்களைப் பார்த்து, ''கவலைப்படாதீர்கள். எங்கள் பையனுக்கு இரத்தத்தில் அணு மிக மிகக்குறைவாக இருந்தது. அவன் இப்போது நன்றாகிவிட்டான். அதுபோல் உங்கள் குழந்தையும் நன்றாகிவிடுவாள்" என்று மிகுந்த மனநிறைவான ஆறுதல் அளித்தார்-கள். அவர்கள் கூறியது மனதுக்கு நிம்மதி தந்தது. அவர்கள் காரைக்குடியில் இருந்து வந்தவர்கள். அவர்களுடைய பையில் ஸ்ரீ மதர் சிம்பலும், ஸ்ரீ பகவான் சிம்பலும் இருந்ததை கண்டு மனம் சந்தோஷத்தில் மதரும், பகவானும் நம்முடன், நம் குழந்தை உடன்தான்



அருகிலே இருக்கின்றனர் என்று ஆனந்தம் அடைந்தோம். எங்கள் குழந்தைக்கு இரத்தம் ஏற்றினார்கள். நான் மனதுக்குள், ''மதர், இது உங்களுடைய இரத்தம். நீங்கள்தான் என் குழந்தைக்கு இரத்தம் கொடுத்திருக்கிறீர்கள்" என்று சமர்ப்பணம் செய்தேன். மதர், ஸ்ரீ பகவான் அவர்களுடைய அருள் வெள்ளத்தால் இரண்டு நாட்களில் அணுக்கள் 90,000 வரை கூடிவிட்டது. வயிற்றுவலி குறைந்தது. "எந்த பிரச்சனையும் இல்லை. உங்கள் குழந்தை ஆபத்து கட்டத்தைத் தாண்டி normal ஆகிவிட்டாள்'' என்று டாக்டர் எங்களிடம் கூறினார். உடனே மருத்துவமனையில் இருந்து discharge செய்தனர். நேராக நாங்கள் அனைவரும் யோகதர்ஷினியை அழைத்துக் கொண்டு திண்டுக்கல்லில் "மதர் மிர்ரா மந்திர்" தியான மையத்திற்குச் சென்று ஸ்ரீ அன்னையிடம், ஸ்ரீ பகவான் அவர்களிடம் கோடான கோடி நமஸ்காரம் செய்து நன்றியைத் தெரிவித்தோம். இப்போது ஸ்ரீ மதர், ஸ்ரீ பகவான் அவர்களின் ஆசீர்வாதத்தால் நன்றாக இருக்கிறாள். வீட்டில் அமர்ந்து மற்ற குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டு இருக்கும்போது மற்ற குழந்தைகள் (எங்கள் உறவினரின் பிள்ளைகள்) எல்லாம் சினிமா பாட்டு பாடிக் கொண்டிருந்தனர். உடனே யோகதர்ஷினி, ''சினிமா பாட்டு வேண்டாம். மதர் பாட்டு 'மலர் போல மலர்கின்ற மனம் வேண்டும் தாயே...' பாட்டு பாடு'' என்று சொன்னாள். உடனே எல்லா குழந்தைகளும் அந்தப் பாட்டு பாடும்போது நடுவிலே அமர்ந்திருந்து என் குழந்தை ஸ்ரீ மதர் ஸ்ரீ பகவான் அவர்களை நோக்கி கையை தூக்கிக் கொண்டு அமர்ந்திருந்தபடி உடலை நகர்த்திச் சென்றாள். மற்ற குழந்தைகள் எல்லாம், ''என்ன யோகதர்ஷினி, எங்கே போகிறாய்?" என கேட்டவுடன், "மதர் படத்தை எடுத்துக் கொடுங்கள்" என்று கேட்டு, படத்தை முத்தம் கொடுத்து வணங்கினாள். இதை நினைக்கும்போது மனம், உடல் புல்லரித்துபோகிறது. எப்போதும் எங்களுடன், எங்கள் குழந்தையுடன், உற்றார், உறவினருடன் எங்கள் அன்பு தெய்வம் ஸ்ரீ அன்னை ஸ்ரீ பகவான் அவர்கள் செயல்பட்டுக் கொண்டே இருப்பார்கள் என்று கூறி இக்கடிதத்தைச் சமர்ப்பிக்கிறேன்.

-- M. *ராதிகா, திண்டுக்கல்.*

❃❃❃

# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**II/16) ஒருவருடைய விஸ்வாசம் அகத்திலுள்ள அன்னைக்குரிய பக்தியாக மாற வேண்டும். அது சைத்திய புருஷனி-லிருந்து எழும்.**

☆ **விஸ்வாசம் பக்தியானால் சைத்திய புருஷன் எழும்.**

- உழைப்பு சேவையானால் தொண்டன் தலைவனாவான்.
- உழைப்பால் பெறும் செல்வம் அறிவால் பெறுவதாக மாறினால் பழக்கம் பண்பாகும்.
- நாகரிகத்திற்குரிய விருந்தாளி நட்பிட்குரியவரானால் விருந்து உறவாகும்.
- அறிவுரை கூறும் ஆசிரியர் ஆன்ம விளக்கம் தந்தால் ஆசிரியர் குருவாக மாறுவார்.
- கட்சித் தலைவர் பதவி ஏற்றால் பிரதமராவார்.
- மாற்றாம் தாயின் பாசம் தாயன்பானால் தாயின் நிலையுயர்ந்து தெய்வமாவாள்.
- நதிக்கரையில் ரிஷி சந்தியாவந்தனம் செய்தால், பலரும் குளிக்கும் ஆறு, பாவங்களைக் கழுவி தீர்த்தமாகும்.
- கட்சியைக் கட்சிக்காக ஆதரித்துப் பேசாமல் நாட்டின் நலனை எடுத்து உரைக்கும் அரசியல்வாதி மூத்த தலைமுறைக்கு உரியவராவார் (statesman).
- நண்பன் கூறும் அறிவுரை நல்லது மட்டும் செய்தால் நண்பன் வேதாந்தியாவான்.
- நண்பன் கூறும் அறிவுரை ஆன்ம விளக்கமானால் நண்பன் குருவாகிவிடுவான்.



- நிலத்தைக் குத்தகைக்குப் பயிரிடுபவன் நிலத்தை பூமாதேவியாகத் தொழுதால் குத்தகைக்காரன் நிலத்திற்குச் சொந்தக்காரனாவான்.
- கல்லூரிப் பேராசிரியர் காவிய நயத்தை உணர்ந்து போற்றினால் கவியாவார்.
- மேடைப் பிரசங்கி கேட்பவர் உணர்ச்சிவயப்படப் பேசினால் நாட்டுக்குத் தலைவராவார்.
- உலகமே எதிர்க்கும்பொழுது உள்ளதைக் கைவிட மறுத்தால் வெறும் மனிதன் உத்தமனாவான்.
- தனக்கு உரிமையற்ற பொருள் தன் பொறுப்பில் நீண்ட நாளிருந்தாலும் அதன் மீது ஆசைப்பட முடியாதவனுக்கு அவனுக்கு உரிமையில்லாத பெரும் பொருள் தேடி வரும்.
- வந்த வியாதியைத் தெய்வீக நம்பிக்கையால் குணப்படுத்தினால் மனிதன் சன்னியாசியாவான்.
- உருவிய வில்வ பத்ரம் பொற்காசாக மாறினால் கோயிலைக் கட்டியவர் யோகியாவார்.
- ஜபம் பலித்தால் ஜபிப்பவர் முனிவராவார்.
- வைத்தியர் கை பட்டால் மருந்தில்லாமல் வியாதி குணமானால் வைத்தியர் ரிஷியாவார்.
- மகான் சமாதியில் மௌனம் தேடி வந்தால் ஆத்மா யோகத்தை நாடுகிறது எனப் பொருள்.
- தன்னை மறந்து தூங்கும் வெங்கட்ட ரமணனை எழுப்ப முடியவில்லை என்று கண்டவர், அவர் தூக்கம் சமாதிக்கு முன்னறிவிப்பு என்று கண்டனர். வெங்கட்ட ரமணன் ரமண மகரிஷியானார்.
- தானே வந்த பெருஞ்செல்வத்தைக் கிருஷ்ணமூர்த்தி ஏற்கவில்லை என்பதால் பேச்சாளர் கிருஷ்ணமூர்த்தி World Teacher ஜகத் குருவானார்.
- யோகம் சுதந்தரம் பெற்றதால் அரசியல் தலைவரான ஸ்ரீ அரவிந்தகோஷ் பகவான் ஸ்ரீ அரவிந்தரானார்.

* பெண்ணின் மனம் கற்பை நாடினால், அவள் அடி திருவடியாகும்.
* உன் மனத்தை நீ கூறாமல் ஒருவர் அறிந்தால், அவர் நண்பரிலிருந்து மகானாகிவிடுவார்.
* இலட்சியம் ஆன்மீக இலட்சியமானால் தசையாலான உடல் கற்பூரமாகும்.
* வக்கீல் வழக்கில் நியாயத்தை எடுத்து கட்சிக்காரனுக்குக் கூறி, அவன் ஏற்றுக் கொண்டால் வக்கீல் ஜட்ஜாக மாறுவார்.
* சிறுவன் ஆன்மா விளங்க பெரியவரிடம் பேசினால் சிறுவன் தகப்பன் சுவாமியாவான்.
* சண்டை போடும் வீட்டிற்கு வந்த விருந்தால், பூசல் போய் சுமுகம் எழுந்தால் விருந்தாக வந்தவர் ஆன்மீகச் சூழலுக்குரியவராகிறார்.

✻✻✻

## II/17) சைத்திய புருஷன் வாழ்வில் சாரத்தைச் சேர்ப்பது படிக்காத நகரவாசி நகர வாழ்வை அறிய முற்படுதல் போன்றது.

> ✫ **தலையில்லாதவன் தலைநகரை அறிவது போல் ஆன்மா சாரத்தைச் சேர்க்கிறது.**

* கணக்குப்பிள்ளை எஸ்டேட்டில் வளரும்பொழுது எஸ்டேட் வேலைகளை அறிந்து, பிறகு தானே எஸ்டேட் முதலாளியாகிறான்.
* சமூகம் பெரியது. அதன் அனுபவம் கணக்கிலடங்காதது. **சமூகம் பெற்ற அனுபவங்களின் சாரம் சர்க்காராக மாறுகிறது.**
* வக்கீல் குமாஸ்தா சட்டத்தின் சாரத்தை அனுபவிப்பது தாழ்ந்தது உயர்ந்ததின் சாரம் பெறுவது.
* இலட்சக்கணக்கான மனிதர்கள் பெற்ற அனுபவ சாரம் ரிஷியின் தவத்தில் அவரைச் சூட்சுமமாக வந்தடைகிறது.



* பல ஆண்டுகள் ஆசிரியராக இருந்தவர், பாடப் புத்தகம் எழுதுவது அங்ஙனமே.
* 10ஆம் நூற்றாண்டிலிருந்து 18ஆம் நூற்றாண்டு வரை விஞ்ஞானிகளானவரில் பெரும் பகுதி பாதிரிமார்கள். பாதிரிமார்கள் உலக வாழ்க்கையின் நுணுக்கம், சாரம், ஆழத்தை ஆன்மீகக் கண்ணுடன் பார்க்கிறார்கள். அதனால் வாழ்வுக்கு அடுத்த கட்ட மனம் செயல்படுகிறது. விஞ்ஞானம் பிறக்கிறது. உலகம் சூரியனைச் சுற்றி வருவதைக் கண்ட கோபர்நிகஸ் பாதிரியார். படிப்பே அன்று சர்ச்சிலிருந்தது.
* இந்தியாவில் எழுந்த 64 சாஸ்த்திரங்களையும் எழுதியவர்கள் ரிஷிகள்.
* சூன்யத்தைக் கண்டவர் பாஸ்கராச்சாரியார்.
* **வாழ்வின் சாரம், பண்பு, நாகரிகம்.**
* மனிதன் கண்ணால் காண்பது (observation) பல்லாயிரம். கண் பார்த்து மனம் அறிகிறது. அது ஞானமாகி, விஞ்ஞானமாகிறது.
* வாழ்வின் சாரம் உயர்ந்த நிலையில் பண்பு, தாழ்ந்த நிலையில் விஞ்ஞானம்.
* எவர் எந்த வேலையைச் செய்தாலும் அதன் சாரம் உயர்ந்த நிலையிலும், தாழ்ந்த நிலையிலும் சேகரமாகும்.
* ரிஷி பத்தினிக்கு ரிஷியின் ஆன்மீகப் பலனில் பாதி என்பது உலக வழக்கு.
* சிஷ்யன் சிறப்பானவனானால் ரிஷியின் அனுபவத்தின் உயர்ந்த அம்சம் அவனை நாடும்.
* அரிஸ்டாட்டில் பிளேட்டோவின் மாணவர்; பிளேட்டோ சாக்கிரடீஸ் மாணவர்.
* இன்று உலகம் அரிஸ்டாட்டிலை அவர் குருவைவிட அதிகமாக அறியும்.
* A.N. Whitehead ஒயிட்ஹெட்டின் மாணவன் ரஸ்ஸல். உலகம் ரஸ்ஸலை அறியும். ஒயிட்ஹெட்டைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லை.

- சைத்திய புருஷன் ஆன்மா பரிணாம வளர்ச்சி பெறுவதால் எழுவது.
- கிருஷ்ணாவதாரத்தின் முன் உலகம் ஆன்மாவை அறியும்.
- அதற்கு முன் தவம், ஞானம், கர்மம் உண்டு; பக்தியில்லை.
- கிருஷ்ணாவதாரம் தெய்வீக ஆன்மா. அது ஆன்மாவின் பரிணாம வளர்ச்சியால் எழுந்தது.
- பக்தி கிருஷ்ணாவதாரத்திற்குப் பின் எழுந்தது.
- வேதநாயகம் பிள்ளை, "வேதம் ஓதும்போது கேட்பவரோ, ஓதுபவரோ விழிநீர் பெருக்குவதில்லை. திருவாசகம் உள்ளத்தை உருக்குகிறது. திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்றார். **வேதம் தருவது ஞானம். திருவாசகம் எழுப்புவது பக்தியின் உருக்கம்.**

❋❋❋

## II/18) குடும்பம் மனிதனைத் தயார் செய்வது போலவும், பல்கலைக்கழகம் மாணவனைத் தயார் செய்வது போலவும், யோகம் சாதகனை உருவாக்குகிறது.

☆ **யோகம் மனிதனுக்குக் குடும்பமும், கல்லூரியுமாகும்.**

- உணவு தெம்பு தரும், அறிவு தராது.
- படிப்பு அறிவு தரும், பண்பு தராது.
- தெம்பு தருவது அன்பான வளர்ப்பு.
- வலிமை தருவது உள்ளம் அமைதியாக அன்பில் உறைவது.
- இவையனைத்தும் மனித சுபாவத்தின் பகுதிகள்.
- இவை சேர்ந்து மனிதனாகாது.
- மனிதத் தன்மை ஒருவனை மனிதனாக்கும்.
- எல்லா மருந்திற்கும் அது குரு மருந்து போல.
- மனிதத் தன்மையை வளர்ப்பு தரலாம், எளிதல்ல.



- அது பிறப்போடு முன் ஜன்ம வரப்பிரசாதம்.
- மனிதன் வாழப் பிறந்தவன்.
- வளமாக வாழ முயல்பவன்.
- வளமாக வாழ்வதுடன் நலமாகவும் வாழ விரும்புகிறான்.
- வளமாகவும், நலமாகவும் வாழ்பவன் எனக்கு இனி என்ன தேவை என்பான்.
- மனித மனம் தெய்வத்தை நினைப்பதில்லை.
- மனித மனம் மனிதரையே பாசமாக நாடும்.
- தெய்வத்தை நாடுவதே உயர்ந்த மனிதனுக்கு உன்னத இலட்சியம் என பகவான் கூறுகிறார்.
- தெய்வத்தை நாடுவது எனில் என்ன?
- உலகம் இயங்குகிறது எனக் காண்கிறோம்.
- ஊரார் உலகை நடத்துவதாக அறிகிறோம்.
- புயல் எழுந்து வீசினால், அவ்வெண்ணம் மாறுகிறது.
- ஊரைக் கடந்த சக்தி உலகை இயக்குவதாக அறிகிறோம்.
- யோகத்தை மேற்கொண்டவர் இறைவன் உலகை இயக்குவதைக் காண்பர்.
- இயற்கையைக் கடந்த இறைவனை அடைவது மோட்சம்.
- மோட்சத்தைத் தவிர்த்து, இறைவனை உலகில் காண்பது யோகம்.
- சிறு குழந்தை, இளம் வயதினர், பசுமையான செடி, கொடிகளில் கவிஞன் இறைவனைக் காண்கிறான்.
- புலியின் வன்முறையிலும், பூகம்பத்தின் அழிவிலும், இறைவனைக் காண முடியாது.
- ஆக்கலும், அழிதலும், அவனே என்பது யோகம்.
- குடும்பமோ, கல்லூரியோ மனிதனை அதற்குத் தயார் செய்ய முடியாது.

***யோகம் தயார் செய்யும்.***

- அகந்தை கரைந்து, இயற்கையின் ஆன்மாவைக் காண்பது யோகம்.
- பாதாளமும், பரமாத்மாவும் இணைந்து உயர்ந்து பிரம்மத்தை அடைவது யோகம்.
- சைத்திய புருஷன் வெளிவருவது யோகம் பலிப்பது.
- உலகம் உய்ய, உள்ளொளி பெருக, உன்னதம் மலர மனம் ஒளியால் நிரம்பி, இதயம் உணர்வால் பொங்குவது யோகம் பலிக்கும் அறிகுறி.

*தொடரும்....*

❋❋❋

**ஜீவிய மணி**

**நேரில் காண்பவை நினைவுக்குரியவை.**

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**அசைவு உடலின் செயல் போல்,**
**எண்ணம், மனதின் செயல்.**





*Page 403* **The miracle of its omniscience appears most strikingly of all what seems to us the action of an inconscient.**

**அஞ்ஞானம், அறியாமை என்று நாம் கருதுவதன் செயலில், எல்லாம் அறிந்தவன் செயல் ஆச்சரியமாக, அற்புதமாக வெளிப்படுகிறது.**

- ஸ்ரீ அரவிந்தம் உலகை புதிய கண்ணோட்டத்துடன் காண்கிறது.
- வாழ்வு என்பது பேய் போன்ற சக்தி. பெண் மனிதனுக்கு ஆசை காட்டப் பிறந்தவள்.

  வாழ்வை விட்டு விலகாமல் இறைவனைக் காண முடியாது.

  சேலை கட்டிய மாதரை நம்ப முடியாது என்பது மரபு.
- வாழ்வு பிரம்மாண்டமான பிரபஞ்ச சக்தி. பிரபஞ்சம் அழிந்தாலும் வாழ்வு அழியாது. இருள் நிறைந்த இன்றைய வாழ்வு தெய்வீக வாழ்வாக மாறுவது ஸ்ரீ அரவிந்தம். இந்த வாழ்வின் அஸ்திவாரம் உடல். **உடல் அற்புதமான ஆன்மாவின் அணிகலன்**. பெண் பெருமையுடையவள். வாழ்வை ஆணுக்குப் பூர்த்தி செய்யப் பிறந்தவள். ஆண் சக்தியின் உறைவிடம். சக்தியின் சாதனைக்குரிய கருவி பெண். ஆண் சாதிக்கும் வகை பல. சாம்ராஜ்யங்களை நிறுவுவது ஆண். சாஸ்திரங்களை உருவாக்குவது ஆண். ஆண் சாதிக்கும் வகை பல. உலகில் சாதனை என்பனவெல்லாம் ஆணுடையது. அவ்வளவும் புறச் சாதனைகள். ஆணின் சாதனையின் சிகரம் அகத்திற்குரியது. அகத்திற்குரியவள் அகம் உடையவள். புறம் பூர்த்தி செய்யும். அகம் இனிக்கும். இனிக்கும் பூரணம் தருபவள் பெண். மனிதன்

பிறந்த நாளிலிருந்து பெண்ணுக்கு மனத்தால் கட்டுண்டவன். அடிமையாய் வாழ ஆசைப்படுபவன். இந்த உண்மையை அக்பர் ஏற்கவில்லை. பீர்பால் ஊரில் உள்ளவரைக் கூட்டினார். மனைவி சொல்லுக்கு உட்பட்டவரை ஒரு புறமும், உட்படாதவரை மறுபுறமும் நிற்கச் சொன்னார். அனைவரும் ஒரு புறமும், ஒருவர் மட்டும் மறுபுறமும் நின்றனர். அவரை, ''ஏன் மறுபுறம் நிற்கிறீர்கள்?'' என வினவியதற்கு, "என் மனைவி கூட்டத்திற்கு எதிராகச் செயல்பட வேண்டும் எனக் கூறியுள்ளாள்'' எனப் பதில் வந்தது. பெண் சக்தி. ஆண் ஈஸ்வரன். ஈஸ்வரன் ஆணையை ஏற்று மகிழ்பவள் சக்தி. ஈஸ்வரன் தன் ஜென்மம் பூர்த்தியடைய சக்தியைச் சரண் அடைகிறான். சக்தியைச் சரணடைந்த ஈஸ்வரனே உலகில் சத்தியஜீவிய அற்புதம் நிகழ்த்துகிறான் என்பது ஸ்ரீ அரவிந்தம்.

- **தீமை, பெண், உடல், வாழ்வு, அஞ்ஞானம் மரபில் விலக்கு.**

  **ஸ்ரீ அரவிந்தம் எதிராகக் கூறுபவை:**

  - தீமை இறைவனுக்கு உச்சக்கட்ட ஆனந்தம் தரும் அரங்கம்.
  - பெண் இறைவனின் யோகத்தை ஆணில் பூர்த்தி செய்ய வந்த அவதாரம்.
  - உடல் பெருவாழ்வின் சிறப்பான அம்சங்கள் சீராக அமைந்த அடிப்படை.
  - அஞ்ஞானம் ஞானத்தைக் கடந்த சிறப்புடையது.

- அயூப்கான் பாகிஸ்தானில் எதேச்சாதிகார ஆட்சியை ஏற்படுத்திய பொழுது இந்தியர் அனைவரும், படித்தவர் உட்பட அப்படிப்பட்ட ஆட்சி வேண்டும் என்றனர். 1975இல் இந்திரா காந்தி எமர்ஜென்சி கொண்டு வந்தபொழுது சர்க்கார் அதிகாரிகள் "இப்பொழுதுதான் சர்க்கார் சர்க்காராக இருக்கிறது. இப்படியேயிருந்தால் நாடு திறமை பெறும்'' என்றனர்.

- எதேச்சாதிகாரம் இன்றும் சுமார் 50 நாடுகளில் உள்ளது. மக்கள் அதைப் பாராட்டுகின்றனர். உலகம் அமெரிக்கத் தலைமையை ஆர்வமாக ஏற்றுள்ளது. அமெரிக்கா மக்களாட்சி. உலகில் மக்களாட்சி மலர்ந்து பிரபலமான நாடு. அங்கு மக்கள் தனி நபர் சுதந்தரத்தை எல்லா வகையிலும் அனுபவிக்கின்றனர். **இந்தச் சுதந்தரம் சுபிட்சமாகிவிட்டது**. மனைவி, குழந்தையுள்பட எவரையும் எவரும் அடிக்க முடியாது. ஆபத்து சுவிட்சைப் போட்டால் அடுத்த 10 நிமிஷத்தில் போலீஸ் அடித்தவரை ஸ்டேஷனுக்கு எடுத்துச் செல்லும். அவர்கள் இன்று மக்களாட்சியை மன்னராட்சிக்கு மாற்ற மனம் இசையமாட்டார்கள். மக்களாட்சி அறியாதவன் ஆட்சி.

  - **அறியாமையை அதிகம் அனுபவிப்பவன் ஆட்சி உலகில் வளம் நிறைந்த நாடாக இருப்பதெப்படி?**
  - **அறியாமை அறிவைவிட உயர்ந்தது என நம் அறிவுக்குப் புலப்படவில்லையெனினும் வாழ்வில் வளம் ஏற்படுத்தும் சக்திக்குப் புலப்படுகிறது.**

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உணர்வின் தேவையும், உண்மையும், உணர்வில் சக்தியுள்ளவரை, உறவை நீடிக்கும். உணர்வின் சக்தி திடீரென எழுந்து மடியும். அடிக்கடியும் அப்படிச் செயல்படும். நிலையாமை அவற்றின் முத்திரை. நித்தியமான பண்பை அவற்றால் ஏற்கவோ, போற்றவோ முடியாது.

***உறவை நீடிப்பது உணர்வின் தேவை.***

# எதிர்வீடு

சமர்ப்பணன்

நேர்மையாகவும், உண்மையாகவும், விசுவாசமாகவும் இருந்து கிட்டதட்ட முப்பது வருடங்கள் கம்பெனிக்காக கடுமையாக உழைத்ததில் நான் பெற்ற பலன், மாத சம்பளமும், மனக்கசப்புமே. என்னைவிட பத்து வயது குறைந்தவர்கள் எல்லாம் டெல்லியிலும், மும்பையிலும் பெரிய பதவியில் இருக்கும்போது, நான் மட்டும் ஒரே பதவியில் பதினாறு வருடங்களாக இருக்கிறேன். இதையேதான் நான், டெல்லியிலிருக்கும் கம்பெனி தலைமை அலுவலகத்திலிருந்து நான் வேலை பார்க்கும் கிளைக்குத் தணிக்கைக்காக வந்திருந்த என் நெருங்கிய நண்பரான பரந்தாமனிடமும் சொன்னேன். ஒரு மாலை நேரத்தில் அவர் தங்கி இருந்த ஹோட்டல் அறைக்குச் சென்று என் ஆதங்கத்தை அவரிடம் வார்த்தைகளாகக் கொட்டினேன்.

“பரந்தாமன் சார், நம் கம்பெனியில் இருக்கும் எல்லோரையும்விட அனுபவத்தில் மூத்த அதிகாரி நான்தான். எனக்கு இன்னும் இரண்டு பதவி உயர்வுகள் வர வேண்டும். அவை எனக்கு நியாயமாக வர வேண்டியவைதானே? நான் சம்பள உயர்வுக்கோ, பிற வசதிகளுக்கோ ஆசைப்பட்டு இதைச் சொல்லவில்லை. எனக்கும் ஐம்பத்தேழு வயதாகிவிட்டது. கம்பெனி கடமைகளில் ஒரு குறையும் வைத்ததில்லை. குடும்பக் கடமைகள் எல்லாவற்றையும் நல்லபடியாக முடித்துவிட்டேன். இனி எனக்கு வேண்டியது என்ன? மரியாதையும், கௌரவமும்தானே? உண்மையான உழைப்பிற்கு மரியாதை தரவில்லை என்றால் இந்தக் கம்பெனி எப்படி உருப்படும்?'' என்று புலம்பினேன்.

“ஆடிட்டர் சார், நீங்கள் சொல்வதெல்லாம் வாஸ்தவமான பேச்சு. கம்பெனி சிறியதாக இருந்தபோது எல்லாமே ஒரு கட்டுப்பாட்டில் இருந்தது. மிகவும் பெரியதாக வளர்ந்தபின் ஒழுங்கு முறை சரி



இல்லாமல் போய்விட்டது. இப்போதெல்லாம் கடமையைச் சரியாகச் செய்தால் மட்டும் பதவி உயர்வு வந்துவிடுவதில்லை. தலைமை அலுவலகத்தில் இருக்கும் எல்லோருடனும் சுமுகமான உறவு வைத்திருக்க வேண்டும். உங்களுக்கோ மனிதர்களோடு பழகத் தெரியவில்லை. மனிதர்கள் சரியானவர்களோ, தவறானவர்களோ, நமக்கு அவர்களது உணர்வுகளை மதிக்கத் தெரிய வேண்டும். அந்த விஷயத்தில் நீங்கள் கொஞ்சம் மட்டுதான்'' என்று பரந்தாமன் உரிமையோடு சொன்னார்.

''இத்தனை வயதிற்கு அப்புறம் நான் மாறுவது என்பது கஷ்டமான காரியம்'' என்று பெருமூச்சு விட்டேன்.

“மாற மனம்தான் வேண்டும். வயது பிரச்சனை இல்லை. நான் இன்றே நம் மேனேஜிங் டைரக்டரிடம் போனில் பேசுகிறேன். அவர் என்னைத் தவறாக நினைத்தாலும் சரி, உங்கள் பிரச்சனை பற்றிப் பேசிவிடுகிறேன்” என்றார் பரந்தாமன்.

“உங்களுக்கு ஏன் சார், வீண் பொல்லாப்பு?'' என்றேன்.

''இதுகூட பண்ணவில்லை என்றால் நட்பு என்பதற்கு என்ன அர்த்தம்? நான் வெகுகாலத்திற்கு முன்பே இதைப் பண்ணி இருக்க வேண்டும். சீனியர் ஆடிட்டர் பதவியைத்தானே கேட்கப்போகிறோம், அவருடைய மேனேஜிங் டைரக்டர் பதவியையா பறிக்கப்போகிறோம்? ஆடிட்டர் சார், உங்கள் பதவி உயர்வு பற்றிய என் தனிப்பட்ட கருத்துகளை உங்களுக்குச் சொல்லாமா?” என்று கேட்டார் பரந்தாமன்.

“அதற்கென்ன தயக்கம்?” என்றேன்.

''நமக்கு நடப்பதெல்லாம் நம் எண்ணங்கள், உணர்வுகள், செயல்கள், இவற்றின் எதிரொலிதான் என்பதில் உங்களுக்கு நம்பிக்கை உண்டுதானே?'' என்று கேட்டார் பரந்தாமன்.

''பல வருடங்களுக்கு முன் உங்களோடு பழக ஆரம்பித்ததில் இருந்து அந்த நம்பிக்கை எனக்கு வந்துவிட்டது'' என்றேன்.

“நாம் வாழ்வது, கண்ணுக்குத் தெரியாத பெரிய சாம்பியனோடு செஸ் விளையாடுவது போன்றது. விளையாட்டின் சட்டங்கள் தெரிந்தால் ஓரளவுக்குத் தாக்குப் பிடிக்கலாம். சட்டம் தெரியவில்லை

என்றால் விளையாடவே முடியாது, அல்லது ஓயாமல் தோற்றுக் கொண்டே இருப்போம். சாம்பியன் இரக்கப்பட்டு நம்மை ஓரிரண்டு முறை ஜெயிக்க விட்டால் அது நம் அதிர்ஷ்டம்" என்றார் பரந்தாமன்.

"உண்மைதான் சார்" என்றேன்.

''வாழ்க்கையில் ஆயிரக்கணக்கான சட்டங்கள் உண்டு. ஒவ்வொரு வினாடியும் அந்தச் சட்டங்களுக்கு உட்பட்டுத்தான் வாழ்கிறோம் என்பது தெரியாமலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சதுரங்கத்தில் ஒவ்வொரு காயையும் ஒரு விதமாகத்தான் நகர்த்த முடியும் என்பது போல ஒவ்வொரு பிரச்சனையையும் ஒவ்வொரு வகையான சட்டத்தின் மூலம்தான் தீர்க்க முடியும். எதைத் தொட்டால் எது நகரும் என்பதைப் புரிந்து கொண்டால், நமக்குக் கட்டுப்பட்ட காரியத்தைச் செய்வதன் மூலம், கட்டுப்படாத காரியத்தைச் செய்து முடிக்கலாம். முரண்டு பிடிக்கும் மாட்டை அடக்கி இழுப்பது கஷ்டம். ஒரு கன்றுக் குட்டியையோ, அல்லது அது போன்ற பொம்மையையோ காட்டினால் மாடு நம் பின்னால் தானாகவே வரும்" என்றார் பரந்தாமன்.

"புரிகிறது பரந்தாமன் சார். எங்கள் ஊரில் ஜட்கா வண்டி குதிரை ஓடவில்லை என்றால், வண்டிக்காரன் குதிரையை அடித்து கஷ்டப்படுத்தமாட்டான். வண்டிக்காரன் வண்டியில் உட்கார்ந்து கொண்டு, ஒரு நீளமான குச்சியில் கொள்ளை கட்டி, கொள் குதிரையின் கண்ணுக்குத் தெரியும்படி குச்சியை முன்னால் நீட்டுவான். அதைச் சாப்பிட குதிரை முன்னால் நகர்ந்து வரும். வண்டி நகரும். குச்சி நகரும். போக வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேரும் வரை குச்சியும், கொள்ளும், குதிரையும், வண்டியும் நகர்ந்து கொண்டே இருக்கும்" என்றேன்.

"நாம் பாமரர்கள் என்று நினைக்கும் நம் கிராமத்து மக்களுக்கு வாழ்க்கையைப் பற்றிய நடைமுறை சூட்சும ஞானம் அதிகமாக உண்டு. நம்மைப் போன்றவர்கள் படித்துப் பட்டம் வாங்குகிறேன் என்ற பெயரில் தானாகவே நமக்குள் ஊறும் ஞானத்தை மறந்துவிட்டு, அறிவாளி-களாகிவிட்டோம் என்று அசட்டுத்தனமாக நினைத்துக் கொள்கிறோம்" என்றார் பரந்தாமன்.



"ஞானத்தைத் தொலைத்துத் தலை முழுகிவிட்டதால் என் பதவி உயர்விற்குச் சிபாரிசு கேட்பதுதான் வாழ்வின் சட்டமா?'' சிறிது கசப்புடன் கேட்டேன்.

''மறந்ததைத் தொலைந்தது என்று நினைக்கக்கூடாது. நீங்கள் சொல்லுவது ஒரு வகையான வாழ்வின் சட்டம்தான். ஆனால் அதைவிட உயர்ந்த, தவறாமல் பலன் தரக்கூடிய பலமான சட்டங்கள் உண்டு. எந்தக் காரியத்திலும் உடல், உணர்வு, மனம் என்று மூன்று பகுதிகள் இருக்கும். அவற்றில் எந்தக் குறையும், தடையும் இல்லா-விட்டால் நாம் யாரையும் கெஞ்சாமல் காரியம் கூடிவரும்'' என்றார் பரந்தாமன்.

''என் வேலையில் நான் ஒரு குறையும் வைக்கவில்லையே?'' என்றேன்.

''நம் கம்பெனியில் தணிக்கை பற்றிய அதிகபட்ச அறிவு ஆடிட்டரான உங்களுக்குத்தான் உண்டு. நீங்கள் செய்த வேலையில் இதுவரையிலும் ஒரு சின்ன குறைகூட வந்ததில்லை. சட்டதிட்டங்களை எந்த வகையிலும் மீறாதவர் நீங்கள். மனத்திலும், உடலிலும் தடை இருப்பது போல் தெரியவில்லை. உணர்வுகளில் ஏதேனும் விட்டுப்போய் இருக்குமோ என்று தோன்றுகிறது'' என்றார் பரந்தாமன்.

''கொஞ்சம் வெளிப்படையாகத்தான் சொல்லுங்களேன். இலைமறை காயாகச் சொன்னால் எனக்குப் புரியாது'' என்றேன்.

"பதவி உயர்வு வந்தால் டெல்லிக்குப் போக வேண்டும். இங்கே நீங்கள் கிளைத் தலைவர். டெல்லியில் அப்படி இருக்க முடியாது. பத்தோடு பதினொன்றாகத்தான் இருக்க வேண்டும். அதைப் பற்றிய ஏதாவது சங்கடம் உண்டா உங்களுக்கு?".

"இல்லை, கம்பெனியின் அமைப்பு அப்படி இருக்கும்போது அதைப் பற்றி ஒரு சங்கடமும் இல்லை" என்றேன்.

"ஹிந்தி தெரியாமல் எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்ற பயம்?" என்று கேட்டார் பரந்தாமன்.

"நான் பள்ளியில் படிக்கும்போதே ஹிந்தியில் பரீட்சை எழுதி பாஸ் செய்திருக்கிறேனே'' சிறிது பெருமிதத்தோடு சொன்னேன்.

“ஆனால் இப்போது எல்லாமே மறந்துவிட்டது. பழைய புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தால் எல்லாம் ஞாபகத்திற்கு வந்துவிடாதா?”

‘‘சொந்த வீட்டை விட்டுவிட்டுப் போக வேண்டுமே என்ற கவலை?’’ என்று அடுத்த கேள்வியைக் கேட்டார் பரந்தாமன்.

‘‘குழந்தைகளுக்குக் கல்யாணம் செய்துவிட்டேன். வேலை பார்க்கிறார்கள். மூத்த பையன் வீட்டைப் பார்த்துக் கொள்வான். ‘டெல்லிக்குப் போகலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்’ என்று சொன்னாலே போதும் என் மனைவி மூட்டை கட்ட ஆரம்பித்துவிடுவாள்” என்றேன்.

‘‘அதிர்ஷ்டக்காரர் நீங்கள். என் மனைவி நான் எதைச் சொன்னாலும் அதற்கு நேர் எதிராகத்தான் பேசுவாள்” என்று சிரித்தார் பரந்தாமன்.

‘‘அப்படித்தான் இருக்க வேண்டும். அப்போதுதான் குடும்ப வாழ்க்கை விறுவிறுப்பாக இருக்கும்’’ என்று சிரித்துக்கொண்டே சொன்னேன்.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தோம். எந்த முடிவிற்கும் வர முடியவில்லை. பரந்தாமன் வாங்கித் தந்த பாதாம் அல்வாவையும், மசாலா டீயையும் சாப்பிட்டுவிட்டு, வீட்டிற்குக் கிளம்பினேன். பரந்தாமன் தங்கியிருந்த விருந்தினர் விடுதியிலிருந்து என் வீட்டிற்கு இருபது நிமிடத்தில் நடந்துவிடலாம்; உடம்பிற்கு நல்லது; வாடகை வண்டிச் செலவு மிச்சம்; தினமும் உடற்பயிற்சி முறையாக செய்யாத சோம்பேறிகள் வழக்கமாகத் தரும் விளக்கம். வாழ்வின் சட்டங்களைப் பற்றி யோசித்துக் கொண்டே என் வீடு இருக்கும் தெருவில் திரும்பும்போது எதிரே மாலா வந்தாள். என் வீட்டிற்கு எதிர் வீடு. அவளுக்கும் என்னைப் போலவே அறுபதை நெருங்கும் வயது என்றாலும், கல்யாணம், காட்சி, குழந்தைகள் என்று எதுவுமில்லாமல் இருப்பதால் தோற்றத்தைப் பார்த்தால் அதிகபட்சம் ஐம்பது என்றுதான் சொல்ல முடியும். ‘கைப் படாத ரோஜா எப்படிக் கசங்கும்?’ என்று என் மனைவி சில சமயம் பொறாமைப்படுவதுண்டு. கல்யாணம் ஆகி இருந்தால் என்னைப் போலவே அவளுக்கும் பேரன், பேத்தி,



இரத்தக்கொதிப்பு, கடன் தொல்லை எல்லாம் இருந்திருக்கும்.

மாலா முகம் மலர்ந்து அன்புடன் புன்னகைத்தாள்.

“கோவிலுக்கா?” என்று கேட்டேன்.

‘‘ஆமாம், இன்று சிவராத்திரி. சிவன் கோவிலில் பூஜை விசேஷமாக இருக்கும். உங்களுக்குத்தான் அதிலெல்லாம் நம்பிக்கை கிடையாதே” என்று சிரித்தபடி கூறினாள்.

‘‘நம்பிக்கை இருக்கிறது. இதைவிட உயர்ந்தது என்று வேறு நம்பிக்கைகளை, விஷயங்களை ஏற்றுக் கொண்டதால், கோவிலையும், பூஜையையும் விட்டுவிட்டேன். ஆனால், நான் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக ஓயாமல் சிலர் பிரார்த்தனை செய்து கொண்டால் அதை நான் தடுப்பதில்லை. பல வருஷங்களாக எனக்குப் பதவி உயர்வு வரவில்லை. அதற்கும் சேர்த்து வேண்டிக் கொண்டால் நன்றாக இருக்கும்” என்றேன்.

“அதைவிட வேறு என்ன முக்கியமான வேலை எனக்கு இருக்கப் போகிறது?” என்று மெல்லிய குரலில் சொன்ன மாலா விடை பெற்றுக் கொண்டாள்.

அந்த இருள் சூழ்ந்த மாலை நேரம் திடீரென்று நடுப்பகலாகி விட்டது போல ஒரு பிரமை. ஆணின் இருளுக்குப் பெண்ணின் அன்புதான் ஒளியா? மாலாவின் அன்பு அவளிடமிருந்து எந்த எதிர்பார்ப்புமின்றி எத்தனையோ வருடங்களாக எனக்குக் கிடைத்துக் கொண்டிருப்பது எனது அதிர்ஷ்டமா, அவளது துரதிர்ஷ்டமா?

நாற்பது வருடங்களுக்கு முன் என்னோடு கல்லூரியில் படித்த எதிர் வீட்டு மாலாவை நானும், பிற மாணவர்களும் நெஞ்சாரக் காதலிக்க எத்தனையோ காரணங்களுண்டு. ஆனால், எதைக் கண்டு அவள் என்னைக் காதலித்தாள் என்பது இன்று வரையிலும் எனக்குப் புரியாத புதிர்தான். அதைவிடப் பெரிய புதிர், சந்தர்ப்ப சூழ்நிலைகளின் மேல் பழியைப் போட்டுவிட்டு அவள் காதலைத் துறந்து வேறொரு பெண்ணை மணந்து கொண்ட என் ஈனச்செயல்! மாலா கல்யாணம் செய்து கொள்ளவில்லை. எப்போதும் போல எதிர் வீட்டில் இருக்கிறாள். எப்போதும் போல மாறாத அன்புடன் இருக்கிறாள். எதிர்பாராமல்

வழியில் சந்தித்துக் கொண்டால், இன்று போல் ஓரிரு வார்த்தைகள் பேசிக் கொள்வதுண்டு. அது தரும் நிறைவு வேறெதிலும் எனக்குக் கிடைப்பதில்லை.

அதைத் தவிர எல்லைகளை மீறும் தைரியம் இதுவரை எனக்கு வரவில்லை. எது எல்லைக்கோடு? நான் நினைப்பதுவா? பிறர் நினைப்பதுவா? யார் போட்ட எல்லைக்கோடு இது? ஏன் இதை மீறத் தயங்குகிறேன்? என் வாழ்க்கையை நான்தானே நிர்ணயிக்க வேண்டும்? என் வாழ்வின் மர்மத்தை நான்தானே உடைத்து, உண்மையின் தரிசனத்தைப் பெற வேண்டும்? கோபுர தரிசனம் பாப விமோசனம். எனக்கு மாலாவின் வீடுதான் கோபுரம். எதிர் வீடு என்பதால் பெண் தெய்வத்தின் தரிசனமும் தினசரி கிடைக்கும். அவள் தினமும் என்னையும், என் குடும்பத்தினரையும் பார்ப்பதால்தான், எந்தக் குறையுமின்றி எல்லாம் நன்றாக நடப்பதாக எனக்கோர் இரகசியமான நம்பிக்கை உண்டு. மூடநம்பிக்கை என்று பிறர் நினைத்தால் அதைப் பற்றி நான் கவலைப்படப்போவதில்லை. இந்த நாற்பது வருடங்களில் நான் வெளியூர் போன நாட்களைத் தவிர வேறெந்த நாளும் அவளது கருணை வழியும் முகத்தைப் பார்க்கத் தவறியதில்லை. தினமும் ஒரு முறையாவது மாலாவைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியாதே!

எப்படிப் பார்க்காமல் இருக்க முடியும்?

இதுதான், இதுவேதான்.

இதுதான் என் பதவி உயர்விற்குத் தடையா? மாலா தடையா? இல்லையில்லை, அவள் தடையில்லை. அவள் தடைகளை நீக்குபவள்! மாலாவைத் தினமும் ஒரு முறையேனும் பார்க்க வேண்டும் என்ற என் ஆசைதான் தடையா? பதவி உயர்வோடு இட மாற்ற உத்தரவு வந்தால் மாலாவைத் தினமும் பார்க்க முடியாதே என்ற என் இரகசியத் தவிப்புதான் தடையா? என் உள்ளுக்குள் நானே அறியாமல் சுடர் விடும் அதிகபட்ச ஆர்வத்தைத்தானே இத்தனை காலமாக வாழ்க்கை நிறைவேற்றித் தந்தது? அதற்காக சந்தோஷப்படாமல் ஏன் இப்படி வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன்?

'ஆடிட்டர் சார், உங்களுக்குப் பதவி உயர்வு வேண்டுமா?



இல்லை, தினசரி மாலாவின் தரிசனம் வேண்டுமா?' உள்மனம் சிரித்தது.

தெளிவு பிறந்தது. 'யாருக்கு வேண்டும் பதவி உயர்வு?'

பதவியின் மீதிருந்த பற்று சட்டென்று மறைய, மனத்திலிருந்த பாரம் விலகி நான் இலேசானது போன்ற உணர்வு. ஓய்வு பெறப்போகும் வயதில் இளமை திரும்பியது போன்ற இனிய உணர்வோடு வீட்டிற்குள் நுழையும்போது போன் அழைத்தது.

''ஆடிட்டர் சார், நான் உங்களிடம் சொன்னபடி மேனேஜிங் டைரக்டரிடம் பேசினேன். அந்தரங்கமாக ஒரு செய்தியைச் சொன்னார். யாரிடமும் சொல்லிவிடாதீர்கள். அடுத்த மாதம் நம் கம்பெனியை நான்கைந்து கம்பெனிகளாகப் பிரிக்கப்போகிறார்களாம். ஒவ்வொரு கிளையும் ஒரு தனி கம்பெனி ஆகப்போகிறது. அந்தந்தக் கிளையில் இருக்கும் மூத்த அதிகாரியை மேனேஜிங் டைரக்டர் ஆக்கிவிடப் போகிறார்களாம். இந்த ஊர் கம்பெனிக்கு நீங்கள்தான் மேனேஜிங் டைரக்டர்....'' பரந்தாமன் மூச்சு விடாமல் பேசிக் கொண்டே போனார்.

*முற்றும்.*

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உன் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் எவருமிலர் என்பதைக் கண்டால், அகந்தையின் வாழ்வு அநித்தியம், உயர்ந்த பண்புக்கு உதவாது என்று பொருள்.

***அகந்தையின் வாழ்வு அநித்தியம்.***

## APPEAL

Dear Patron,

India Post has been delivering mail (letters, parcels, money orders, magazines, etc.) to you at all times whenever there has been one. In recent years due to rapid urbanization, migration, and frequent relocation, both within the City and inter-cities, an increasing percentage of mail is being returned to the sender for want of 'REDIRECTION' address from the addressee. Consequently important mails such as bills, statements, dividends, share documents, warrant of payments, cheques, reminders, notices, circulars, admission tickets, call letters for interview, appointment letters, passport, greeting, invitations, magazines and other varieties of mail are not getting delivered to the general public, putting them to enormous hardships.

In order to deliver the mails promptly and correctly, India Post appeals to one and all to inform the 'REDIRECTION ADDRESS' to the concerned delivery Post office. You may, of course, inform your revised address to all your correspondents also. It is requested to ensure that the correct Pincode is invariably mentioned in all the communications for timely delivery.

Yours sincerely,
Postmaster, India Post

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

## அன்பர் தரிசனம் அன்னை தரிசனம்

அன்பரில் அன்னையிருப்பதை அவரே கருதுவதில்லை. உடனிருப்பவர்க்குத் தெரிவதில்லை. புதியதாக அன்பரைக் காண்பவருக்குத் தெரியும். அன்பர் ஒரு கடையில் நுழைந்தால், கடைக்காரர்களைக் கவனித்துவிட்டு, அன்பரைக் கவனிக்கிறார். **அன்பர் வரும்பொழுது பல வாடிக்கைகாரர் வருவதை அவன் கவனிக்கிறான். அவர் கடையிலுள்ளவரை தொடர்ந்து வாடிக்கைக்காரர் வருவதை அவன் அறிவதால், அவரை உட்கார வைக்கிறான்.** காலியான பஸ்ஸில் அன்பர் ஏறினால் பஸ் உடனே நிறைவதைக் கண்டக்டர் காண்கிறார்.

அன்பர் ஒரு விசேஷத்திற்குப் போனால் அங்கு வராத பெரிய மனிதர்கள் வருகிறார்கள். அன்பர் ஒரு ஸ்தாபனத்தில் சேர்ந்தால், ஸ்தாபனம் எல்லா வகைகளிலும் உயர்வதை அங்குள்ளவர் காண்கிறார்கள். பொதுவாக அன்பர் அதை அறிவதில்லை.

தன் வீட்டிலிருந்து ஆபீசுக்குப் போன அன்பர் வழியில் நண்பர் வீட்டினுள் நுழைந்து அவரிடம் ஒரு புத்தகம் கொடுத்தார்.

வேலைக்காரி அவரைப் பார்த்துவிட்டு உள்ளே போய் நண்பரிடம் சொன்னார்.

சிறிது நேரம் கழித்து அன்பர் போய்விட்டார்.

அடுத்த மாதம் நண்பர் அன்பரைக் கூப்பிட்டு,

*‘‘நீங்கள் வந்தபொழுது உங்களைப் பார்த்த வேலைக்காரிக்குப் புது வேலை வந்துவிட்டது. நான் 1,500 ரூபாய் கொடுத்தேன். ரூ.3,000க்கு வேலைக்குப் போய்விட்டாள். பகுதி நேர வேலை ஒன்று மேலும் 1,500 ரூபாய் தரும்படி வந்துள்ளது’’ என்று கூறினார்.*

***பிறர் நம்மால் பெறும் அதிர்ஷ்டம் நமக்கு அருள்.***

❋❋❋

## முயன்று பெறுவது பெரியது
## முயலாமல் பெறுவது பிரம்மாண்டமானது
## ஜீவன் முயற்சியை இழந்தபின் பெறுவது
## *பெறற்கரிய ஆன்மீகப் பேறு*

பகவான் இலட்சியம் இந்திய விடுதலை. ICSஐத் தவிர்த்து அரசியலில் சேர்ந்து, யோகத்தை நாடி, சிறை சென்று, அவர் பெற்றது, அவரது முயற்சியால் பெற்றது இந்திய சுதந்திரம், உலகப் போரில் வெற்றி.

புதுவை வந்து போதிய பண வசதியின்றி, போலீஸின் குண்டர்களால் அச்சுறுத்தப்பட்டு பல வீடுகளுக்கு மாறி, சில சாதகர்களுடனிருந்து யோகம் செய்த பொழுது அவரை நாடி அன்னை வந்தது, வந்து அவரை நிரந்தரமாக ஏற்றது பகவான்

***முயலாமல் பெற்றது - அன்னை வருகை.***

அன்னை வருகை ஆயிரம் காலத்து அற்புதப் பயிர். அன்னையே அனைத்தும்.

பகவான் யோகம் யோக முயற்சியைக் கடந்த நேரம், உலகம் உய்யும் நேரம்.

உறுதுணையற்ற நேரமாயினும் உயர்ந்த ஒப்புயர்வற்ற நேரம்.

அவர் இலட்சியம் அனந்தனின் இலட்சியமாகி, அதுவே தன்னைப் பூர்த்தி செய்யும் நேரம்.

***அது சத்தியஜீவியம் உலகை வந்தடைந்தது.***

***பேரருள் பெற பிறர் அருள் பெறும் இதயம் தேவை.***

❋❋❋

March 2011 Jiviyam 16 Malar 11
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Price: Rs.5/- WPP No.45/09-11

## புதிய வெளியீடுகள்

**ESSAYS ON ACCOMPLISHMENT** ரூ.150/-
N.Asokan

**கர்மயோகியின்**

**அன்னையின் ஆன்மீகப்பரிசு** ரூ.100/-

**லைப் டிவைன் - கருத்துகள்** ரூ.100/-

**பரம்பொருள் III** ரூ.200/-

**எங்கள் குடும்பம் (பாகம் 2)** ரூ.250/-

**உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** ரூ.100/-

**யோக வாழ்க்கை விளக்கம் IV** ரூ.150/-

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

**லைப் டிவைன் விரிவுரைகள்** ரூ.100/-
*தமிழாக்கம்:* என். அசோகன்

**SATYA JYOTHI** ரூ.200/-
(CONCISE TRUISMS)
N.Asokan

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை - 600 035.
✆: (044)-24347191